

அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில், தஞ்சாவூர்

கொள்கை விளக்கக் குறிப்பு 2020 – 2021

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை
# இந்து சமய அறநிலையங்கள்

கொள்கை விளக்கக் குறிப்பு
2020 – 2021

மானியக் கோரிக்கை
எண் : 47


அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி


அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

**சேவூர் சோ. இராமச்சந்திரன்**
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# இந்து சமய அறநிலையத்துறை

# மானியக் கோரிக்கை எண்.47

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2020–2021

## பொருளடக்கம்


| பொருள் | பக்க எண் |
|---|---|
| **முகவுரை** | 1 |
| **திருக்கோயில்களின் தனித்துவமான கட்டடக்கலை அம்சங்கள்** | |
| சங்ககால கட்டடக்கலை | 2 |
| பல்லவர் கால கட்டடக்கலை | 3 |
| பாண்டியர் கால கட்டடக்கலை | 5 |
| சோழர் கால கட்டடக்கலை | 5 |
| சேரர் கால கட்டடக்கலை | 7 |
| விஜயநகரம் மற்றும் நாயக்கர் கால கட்டடக்கலை | 8 |
| கல்வெட்டுகள் | 9 |
| **I - சட்டமும், நிருவாக அமைப்பும்** | |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| **தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959** | 10 |
| இந்து சமய நிறுவனங்கள் | 12 |
| இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு | 13 |
| நிருவாக அமைப்பு | 14 |
| மண்டல மற்றும் கோட்ட நிருவாகம் | 17 |
| இந்து சமய அறநிலையத்துறையில் இணை ஆணையரின் பணிகள் | 21 |
| இந்து சமய அறநிலையத்துறையில் உதவி ஆணையரின் பணிகள் | 23 |
| இந்து சமய அறநிலையத்துறையில் ஆய்வாளர்களின் பணிகள் | 24 |
| சரிபார்ப்பு அலுவலர்கள் | 25 |
| பொறியாளர்கள் மற்றும் ஸ்தபதிகள் பிரிவு | 26 |
| வரைபடங்கள் மேலொப்பம் செய்தல் மற்றும் திருப்பணி மேற்கொள்ள கருத்து வழங்கும் ஆலோசனைக் குழு | 28 |
| மண்டல ஸ்தபதிகள் | 29 |
| திருக்கோயில் நிருவாகம் | 30 |
| செயல் அலுவலர்கள் | 30 |
| நேர்முக உதவியாளர்கள் | 32 |
| துணை ஆணையர், பழநி | 32 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| முதுநிலை கணக்கு அலுவலர்கள் | 32 |
| திருக்கோயில்களில் பொறியியல் பிரிவு | 33 |
| திருமடங்களின் நிருவாகம் | 33 |
| திருமடங்கள் – ஒரு பார்வை | 34 |
| இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கை | 38 |
| ஆலோசனைக்குழு | 40 |
| மாவட்டக் குழுக்கள் அமைத்தல் | 41 |
| அறங்காவலர்கள் நியமனம் | 42 |
| அறங்காவலர் நியமனத் தகுதிகள் | 42 |
| அறங்காவலர்களை நியமனம் செய்ய அதிகார வரம்பு | 43 |
| தக்கார் நியமனம் | 45 |
| **II – இந்து சமய அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்கள் நிருவாகம்** | |
| நிலங்களின் விவரம் | 46 |
| நியாய வாடகை நிர்ணயம் | 47 |
| வருவாய் நீதிமன்றங்கள் | 47 |
| நிலங்களை மீட்டல் | 49 |
| ஓய்வுபெற்ற துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் நில அளவையர்கள் நியமனம் | 51 |
| ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் | 51 |
| கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல் | 52 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| **III - சிறப்புத் திட்டங்கள்** | |
| அன்னதானத் திட்டம் | 53 |
| அன்னதான பற்றாக்குறை நிதி | 55 |
| நாள் முழுவதும் அன்னதானம் | 55 |
| ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறி வகுப்புகள் | 56 |
| சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் | 57 |
| யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் | 57 |
| ஏழை எளியோர்களுக்கான திருமணத் திட்டம் | 60 |
| கம்பிவட ஊர்திகள் | 61 |
| மின்கல மகிழுந்துகள் | 62 |
| கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களுக்கான அரசு மானியம் | 64 |
| ஒரு கால பூஜைத் திட்டம் | 64 |
| சிறு திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்கள் வழங்குதல் | 67 |
| பழைமையான திருக்கோயில்களின் கால பூஜைகளுக்கு புத்துயிரூட்டல் | 67 |
| **IV - திருப்பணி** | |
| திருப்பணி ( பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) | 68 |
| திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள் | 69 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| திருக்கோயில் மூலம் பணி மேற்கொள்ள நன்கொடை நிதி | 70 |
| திருக்கோயில் நிதி | 71 |
| பிற திருக்கோயில்களின் உபரி நிதிமாற்றம் | 71 |
| அரசு மானியம் | 72 |
| இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி | 73 |
| பொது நல நிதி | 75 |
| ஆலய மேம்பாட்டு நிதி | 76 |
| கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி | 77 |
| திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி | 78 |
| பக்தர்கள் மூலம் நேரடியாக மேற்கொள்ளப்படும் உபயத் திருப்பணிகள் | 79 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதி | 80 |
| சுற்றுலாத்துறை நிதி | 81 |
| ஆசிய வளர்ச்சி வங்கி மூலமாக பெறப்படும் நிதி | 82 |
| பழைமை வாய்ந்த திருக்கோயில்களைப் பாதுகாத்தல், பழைமை மாறாது புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கத் திருப்பணி | 83 |
| சுவரோவியங்களை புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல் | 84 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| திருக்குளங்களை சீரமைத்தல் மற்றும் மழைநீர் சேகரித்தல் | 86 |
| மதுரை, அருள்மிகு மாரியம்மன் தெப்பக்குளம் நீர்வரத்து வாய்க்கால் புனரமைத்தல் பணி | 87 |
| பட்டயப் பொறியாளர்களைப் பட்டியலிடுதல் | 89 |
| ஸ்தபதிகளைப் பட்டியலிடுதல் | 90 |
| குடமுழுக்கு (கும்பாபிஷேகம்/சம்ப்ரோக்ஷணம்) | 90 |
| தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா | 91 |
| சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா | 93 |
| மரத்திருத்தேர் | 94 |
| தங்கரதம் மற்றும் வெள்ளிரதம் உள்ள திருக்கோயில்கள் | 95 |
| **V - பக்தர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள்** | |
| **அடிப்படை வசதிகள்** | |
| குடிநீர் வசதி | 104 |
| நவீன கழிப்பிட வசதிகள் | 106 |
| தங்கும் வசதிகள் | 106 |
| அன்னதானக் கூடம் | 108 |
| திருக்கோயில் வழிகாட்டி / தகவல் பலகைகள் | 109 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| பக்தர்களுக்கு உயர்தர திருநீறு மற்றும் குங்குமம் வழங்குதல் | 109 |
| மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதப் பயணம் | 110 |
| புடவை மற்றும் வேட்டிகள் வழங்குதல் | 112 |
| பக்தர்களுக்கு இலவச லட்டு பிரசாதம் வழங்கும் திட்டம் | 112 |
| **VI - திருக்கோயில்கள் தூய்மையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும்** | |
| உழவாரப்பணி | 114 |
| வெளிமுகமை மூலம்  தூய்மை பராமரிப்பு | 115 |
| திருக்கோயில் வளாகத்தில் நெகிழி (plastic) பயன்பாட்டினை தடை செய்தல் | 115 |
| மாற்று மின்திட்டம் | 116 |
| **VII - பாதுகாப்பு நடவடிக்கைகள்** | |
| திருக்கோயில்கள் பாதுகாப்பு | 116 |
| உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் பாதுகாப்பு | 117 |
| பாதுகாப்பு  அறைகள் | 118 |
| களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம் | 119 |
| உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் | 120 |
| திருக்கோயில் பாதுகாப்புப் படை | 124 |
| திருக்கோயில்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் | 125 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| **VIII – கல்வி மற்றும் அறப்பணிகள்** | |
| கல்வி நிறுவனங்கள் | 127 |
| வேத ஆகம பாடசாலைகள் | 134 |
| ஓதுவார் பயிற்சி பள்ளிகள் | 135 |
| கல்வி நிறுவனங்களுக்கு தரச்சான்று | 136 |
| சமூக நல நிறுவனங்கள் | 137 |
| கருணை இல்லங்கள் | 138 |
| பள்ளி, கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள் | 139 |
| கோசாலைகள் | 140 |
| **IX - திருக்கோயில்களும் தமிழும்** | |
| போற்றி நூல்கள் | 141 |
| தமிழ் புத்தாண்டு தின விழா | 142 |
| பாவை விழா | 143 |
| இசைவாணர்கள் நியமனம் | 144 |
| **X - அருளாளர்கள் விழா** | |
| சேக்கிழார் விழா | 145 |
| திருஞானசம்பந்தர் இசை விழா | 145 |
| ஔவையார் விழா | 146 |
| தாயுமானவர் விழா | 146 |
| திருவள்ளுவர் திருநாள் | 147 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| அருணகிரிநாதர் விழா | 147 |
| கோச்செங்கட்சோழ நாயனார் விழா | 148 |
| ஆழ்வார்கள் விழா | 148 |
| **XI – வெளியீடுகள்** | |
| தலவரலாறு மற்றும் தலபுராணம் | 148 |
| பயணியர் மாவட்ட கையேடுகள் | 149 |
| “திருக்கோயில்” – திங்களிதழ் | 149 |
| சமய நூல்கள் விற்பனை | 150 |
| ஆகம நூல்கள் மற்றும் இதர நூல்கள் தமிழில் வெளியிடுதல் | 151 |
| **XII - பயிற்சித் திட்டங்கள்** | |
| புத்தொளிப் பயிற்சி | 151 |
| பொறியாளர்களுக்கு “பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு” என்னும் குறுகிய கால பயிற்சி | 153 |
| திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கு “பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு” என்னும் குறுகிய கால பயிற்சி | 154 |
| மனிதநேய பயிற்சி | 154 |
| சுயம்பாகிகள் (மடப்பள்ளி சமையற்காரர்கள்), அன்னதான சமையற்காரர்கள் மற்றும் பிரசாத கடை ஒப்பந்ததாரர்களுக்கான பயிற்சி | 155 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| திறன் மேம்பாட்டு பயிற்சி | 158 |
| **XIII - திருக்கோயில் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள்** | |
| நலத்திட்ட விவரங்கள் | 161 |
| குடும்ப நல நிதித் திட்டம் | 162 |
| சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் | 163 |
| மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் | 164 |
| ஆலய ஊழியர்கள் நலநிதி | 165 |
| கருணை அடிப்படையில் பணிநியமனம் | 166 |
| அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம் | 167 |
| திருக்கோயிலில் பணிபுரியும் இதர பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 167 |
| திருக்கோயில் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் திட்டம் | 170 |
| திருக்கோயில் பணியாளர்களுக்கு திருத்திய ஊதிய நிர்ணயம் | 171 |
| **XIV - கிராமக்கோயில் பூசாரிகள் நலத் திட்டங்கள்** | |
| கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம் | 171 |
| கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம் | 171 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| **XV – துறை மற்றும் திருக்கோயில்களின் செயல்பாடுகள் கணினிமயமாக்குதல்** | 172 |
| **XVI – விருதுகள்** | 175 |
| நிறைவுரை | 178 |

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# இந்து சமய அறநிலையத்துறை

# மானியக் கோரிக்கை எண்.47
# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2020–2021

## முகவுரை

தமிழ் கூறும் இந்நல்லுலகை ஆண்ட பேரரசர்கள் இம்மண்ணின் சமயம், கலை மற்றும் கட்டடக்கலையை பாதுகாக்கும் புரவலர்களாகவே இருந்து வந்துள்ளனர். நம்மண்ணின் மன்னர்கள் சமய உணர்வு கொண்டோராகவும், செறிவான பாரம்பரியம் மற்றும் பண்பாட்டினைக் காப்போராகவும் இருந்து வந்துள்ளனர்.

அத்தகு மன்னர் பெருமக்களால் கட்டி எழுப்பப்பட்டுள்ள திருக்கோயில்கள் யாவும், அவர்களது அறம் சார்ந்த நெறிகளுக்குச் சான்றாகவும், அவர்கள் கலை மற்றும் கட்டடக் கலையின் புரவலர்களாக வெளிப்படுத்திய பேரார்வத்திற்குச் சான்றாகவும் இன்றளவும் நிலைத்து நிற்கின்றன. தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் தொன்மையான நம் பண்பாட்டின் சாட்சிகளாகும்.

ஆலயங்கள் சமுதாயத்தின் பொதுச் சொத்துக்களாகவும், சமூக, பொருளாதார வேறுபாடுகளால் பிரிவுபடாமல் அனைவரும் சமம் என்ற உணர்வை வளர்க்கும் புனிதத் தலங்களாகவும் திகழ்ந்து வருகின்றன என **மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் கூறியுள்ளார்கள்.

**திருக்கோயில்களின் தனித்துவமான கட்டடக்கலை அம்சங்கள்**

**சங்ககால கட்டடக்கலை**

**2.** முற்காலச் சோழ, சேர மற்றும் பாண்டிய மன்னர்களின் அரசாட்சிகளின் போது கார்த்திகேயன், சிவன், அம்மன் மற்றும் விஷ்ணு ஆகிய தெய்வங்களுக்கு செங்கற்களால் ஆன கோயில்கள் கட்டப்பட்டன. அவற்றுள் பல சமீபகாலத்தில் ஆதிச்சநல்லூர், காவிரிப்பூம்பட்டினம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் அகழாய்வு செய்து கண்டறியப்பட்டுள்ளன. முன்னிடைக்கால பேரரசுகள், இச்செங்கற் கட்டுமான கோயில்களில் பல்வேறு கூடுதல் கட்டுமானங்களைச் சேர்த்துள்ளனர். மேலும் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

ஆகியவற்றின் கலைச் சிற்பங்கள் மற்றும் தெய்வத்திருமேனிகள் சங்ககாலத்துடன் தொடர்புடையவை எனக் கண்டறியப்பட்டுள்ளன.

**பல்லவர் கால கட்டடக்கலை**

**3.** பல்லவர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவில் கற்கள் மற்றும் சுதை கொண்டு கட்டப்பட்ட கோயில்கள் முந்தைய காலத்தில், செங்கல் மற்றும் மரம் கொண்டு கட்டப்பட்ட கோயில்களின் கட்டுமானத்தை முன்னோடியாகக் கொண்டு கட்டப்பட்டவையாகும். பல்லவ மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் கோயில் கட்டுமானக்கலையில் குடைவரைக் கோயில்கள் என்கிற பாணியிலிருந்து கல்கட்டுமானக் கோயில்கள் என்கிற பரிணாமவளர்ச்சி ஏற்பட்டது. பல்லவர்காலக் கட்டுமானக் கலையின் பெருஞ்சாதனையான குடைவரைக் கோயில்கள் கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலும், கல்கட்டுமானக் கோயில்கள் கி.பி. **8** மற்றும் **9** ஆம் நூற்றாண்டிலும் ஏற்பட்டன. பல்லவர்கள் காலத்துச் சிற்பிகளின் திறனுக்குச் சான்று காலத்தால் அழியாத பஞ்ச ரதம் மற்றும் மண்டபம் வடிவிலான ஒற்றைக்கல் கோயில்களே. ஒற்றைக்கல் கோயில்கள் மாமல்லபுரத்து கடற்கரை கோயில் போன்ற கல்கட்டுமானக்

கோயில்களுக்கு வழிகோலின. இந்த வகைக் கோயில்கள் வெட்டிச் செதுக்கப்பட்ட தூண்கள் மீது நிற்கும் அறைகளையும், இயற்கையான கல்லால் அமைந்த, வெளிப்படையாகத் தெரியாத வகையிலான கூரைகளையும் கொண்டிருந்தன. அதேநேரம், ஒற்றைக்கல் கோயில்களில் இயற்கையாக உருவான பாறைகளின் பகுதிகள், குடைந்து வெட்டி எடுக்கப்பட்டு, கூரை அமைப்புடன் உருவாக்கப்பட்டன. பல்லவர் காலச் சிற்பிகள், தொடர்ந்து வந்த காலத்தில், பிடிமானம் இல்லாத தூண்களின் மீது கட்டுமானக் கோயில்களை கட்டுமளவிற்கு வளர்ச்சியுற்றனர். அக்கட்டுமானங்களே பிற்கால சோழர்களின் கோயில் கட்டுமானத்திற்கு உந்து சக்தியாய் அமைந்தன. பல்லவர் கால கலை மற்றும் கட்டடக்கலைக்கு மிகச்சிறந்த உதாரணங்களாக இன்றளவும் திகழ்பவை, காஞ்சிபுரம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் மற்றும் பஞ்ச ரதங்களாகும். பல்லவர்கள் காலத்தில் ''அக்ஷரா'' என்பவர் தலைசிறந்த சிற்பியாய் விளங்கினார்.

## பாண்டியர் கால கட்டடக்கலை

**4.** குடைவரை மற்றும் கல்கட்டுமானக் கோயில்கள், பாண்டியர் காலத்து கட்டுமானக்கலையின் குறிப்பிடத் தகுந்த அம்சங்களாகும். விமானங்களும், மண்டபங்களும் முற்கால பாண்டியர்களின் கோயில் கட்டுமானத்தில் குறிப்பிடத் தகுந்த அம்சங்களாய் இருந்தன. இத்தகைய கோயில்கள் திருச்சி மாவட்டத்தில் காணப்படுகின்றன. பாண்டியர்களின் பிற்கால ஆட்சியில் நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட சிலைகள், கோபுரங்கள் மற்றும் விமானங்கள் என கோயில் கட்டுமானக்கலை வளர்ச்சியடைந்தது. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருநெல்வேலி, அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில் ஆகியவை பாண்டியர்கள் காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில்களாகும்.

## சோழர் கால கட்டடக்கலை

**5.** சோழப் பேரரசர்கள் புரவலர்களாயிருந்து, அதிக எண்ணிக்கையிலான திருக்கோயில்களை சோழப் பேரரசெங்கும் கட்டுவித்தனர். சோழ மன்னர்களில் முக்கியமானவர்களான முதலாம் இராஜராஜ சோழன் மற்றும்

அவரது மகன் முதலாம் இராஜேந்திர சோழன் ஆகியோரால் தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில், கங்கைகொண்ட சோழபுரம், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் ஆகியவை கட்டப்பட்டன. மேலும் சோழர்கள் காலத்தில் தாராசுரம், அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருபுவனம், அருள்மிகு கம்பஹரேஸ்வரர் திருக்கோயில் ஆகியவை கட்டப்பட்டன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு திருக்கோயில்களில் முதல் மூன்று திருக்கோயில்கள், ஐக்கியநாடுகள் சபையின் அங்கமான யுனெஸ்கோவால் “Great Living Chola Temples” என அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**6.** சோழ மன்னர்கள் முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன், சுந்தரசோழன், இராஜராஜ சோழன் மற்றும் அவரது மகன் முதலாம் இராஜேந்திர சோழன் ஆகியோர் பெற்ற வெற்றிகளால் சோழர் கால கோயில்கள் கட்டுமானக்கலை உத்வேகம் பெற்றது. முதலாம் இராஜராஜ சோழன் தஞ்சாவூரில் கட்டிய பெரிய கோயிலுக்கு இராஜராஜேஸ்வரம் என்று பெயரிட்டார். சோழர் கால கட்டுமானக்கலையின் முதிர்ச்சி மற்றும் கம்பீரம் ஆகியவை தஞ்சாவூர் மற்றும் கங்கைகொண்ட சோழபுரத்தில்

அமைந்துள்ள இத்திருக்கோயில்களின் வாயிலாக வெளிப்படுகிறது.

**7.** ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் சிதம்பரம், அருள்மிகு சபாநாயகர் (நடராஜர்) திருக்கோயில் ஆகியவை சோழர்களால் ஆதரிக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்ட இரண்டு மிக முக்கியத் திருக்கோயில்களாகும்.

**8.** சோழப் பேரரசர்களின் காலத்தில் திருக்கோயில்களின் திருமதில்கள் மிகப் பிரமாண்டமாக கட்டி எழுப்பப்பட்டன. சோழப் பேரரசர்கள், வானளாவிய கோபுரங்களுடன் கோயில்களைக் கட்டி எழுப்புவதில் பேரார்வம் காட்டினர். மேலும், கட்டுமானக்கலையில் பல்வேறு முறைகளையும் கையாண்டனர்.

**சேரர் கால கட்டடக்கலை**

**9.** சேரர்கள் பருவநிலையினைக் கருத்தில் கொண்டு சரிவான கூரைகளுடன் கூடிய கட்டுமானக் கலையினை திருக்கோயில்களில் பின்பற்றியுள்ளனர். இவ்வகைத் திருக்கோயில்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் காணப்படுகின்றன.

**விஜயநகரம் மற்றும் நாயக்கர் கால கட்டடக்கலை**

**10.** வேலூரில் கோட்டையின் உள்ளே அமைந்துள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயில் விஜயநகர கட்டடக்கலைக்கு சிறந்த உதாரணமாகும். இத்திருக்கோயில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த கோபுரம், பிரம்மாண்டமாய் செதுக்கப்பட்ட கற்தூண்கள், பெரிய மரக்கதவுகள் மற்றும் பிரமிக்கத்தக்க கற்சிற்பங்கள் ஆகியவற்றுடன் மிளிர்கிறது. இந்த விஜயநகர சிற்பங்கள் திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு, அருள்மிகு சௌந்தரராஜப் பெருமாள் திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம், கிருஷ்ணாபுரம், அருள்மிகு வெங்கடாஜலபதிசுவாமி திருக்கோயில், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில் மற்றும் மதுரை மாவட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், ஆகிய திருக்கோயில்களில் அமைந்துள்ள சிற்பங்களை ஒத்திருக்கின்றன.

**11.** மதுரை மற்றும் தஞ்சாவூரை ஆண்ட நாயக்கர்கள் திருக்கோயில் கட்டுமானக் கலைக்கு பெரும்பங்களித்தனர். நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்கள், சுதை

சிற்பங்களுடன் கூடிய உயர் கோபுரங்கள் மற்றும் நீளமான தாழ்வாரங்களுடன் கூடிய திருக்கோயில் கட்டுமானம் இவர்களது கட்டடக்கலைப்பாணியாகும்.

இந்த பாணியில் அமைந்த முக்கியத் திருக்கோயில்களாவன:-

1. ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்.
2. இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்.
3. தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயிலில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி சன்னதி.
4. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்.

**கல்வெட்டுகள்**

**12.** தமிழ்நாட்டை ஆண்ட பேரரசர்கள் மற்றும் குறுநில மன்னர்கள் மட்டுமல்லாது, குடிமக்களும் பெருமளவு சொத்துக்களை திருக்கோயில்களின் பராமரிப்பிற்காகவும் இதர சேவைகளுக்காகவும் கொடையாக வழங்கியுள்ளனர். இவ்விவரங்கள் பல்வேறு திருக்கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகிறது.

## I - சட்டமும், நிருவாக அமைப்பும்

**தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959**

**13.** தமிழ்நாடு அரசால் ஏற்கனவே இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு தற்போதுள்ள 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் (சட்டம் 22/1959) உருவாக்கப்பட்டது. இந்து சமய திருக்கோயில்கள், திருமடங்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றின் நிருவாக மேலாண்மை மற்றும் சீரான நிதிநிலைமை ஆகியவற்றை கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தும், இந்து சமய அறநிலைக் கொடை நிறுவனங்களை நிருவகிப்பது குறித்தும், முந்தைய சட்டங்களில் உரிய திருத்தங்களை மேற்கொண்டு அரசால் இயற்றப்பட்ட சட்டமாகும்.

**14.** இச்சட்டம், ஏற்கனவே இயற்றப்பட்ட பல்வேறு முந்தைய சட்டங்களின் தொடர்ச்சியாகும். முதலில் மதராஸ் நிலைக் கொடைகள் மற்றும் வாரிசு இன்மையால் அரசுப் பொருட்கள் ஒழுங்குறுத்தும் சட்டம் எண்.VII/1817 உருவாக்கப்பட்டது. இச்சட்டம், சட்டம் XX/1863 மூலம்

நீக்கப்பட்டது. பின்னர், மதராஸ் இந்து சமய அறக்கொடை சட்டம், **1926** (சட்டம் II/1927), இச்சட்டத்திற்கு மாற்றாக நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி மதராஸ் இந்து சமய அறநிலைய வாரியம் உருவாக்கப்பட்டது. **1951**–ல் சட்டம் XIX-ன் படி வாரியம் ரத்து செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகளின் நிருவாகம், ஆணையரைத் தலைவராகக் கொண்டு பல நிலைகளில் அலுவலர்களுக்கு அதிகார வரம்புகள் வரையறுக்கப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. **1951**–ஆம் ஆண்டு சட்டம் நீக்கம் செய்யப்பட்டு அதற்கு பதிலாக தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் **1959** (சட்டம் **22/1959**) இயற்றப்பட்டு, அதில் ஆணையரின் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்புக் கொண்டதாக இந்து சமய அறநிலையத்துறை நிருவாக அமைப்பு உருவாக்கப்பட்டது.

**15.** இந்து சமய நிறுவனங்களை நிருவகித்திட பல்வேறு வழிவகைகளையும், அவற்றைச் செயல்படுத்திட தேவையான அதிகாரங்களையும், கடமைகளையும் இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு இச்சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இச்சட்டம் இந்து சமய அறநிறுவனங்களின் நிதி நிலைமையினை சீராக மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிமுறைகளைக் கொண்டுள்ளது. இச்சட்டத்தின் காப்புரைகள் சமண சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**இந்து சமய நிறுவனங்கள்**

**16.** இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் **38,655** இந்து சமய மற்றும் சமண சமய நிறுவனங்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 36,615 |
| 2. | திருமடங்கள் | 56 |
| 3. | திருமடத்துடன் இணைந்த திருக்கோயில்கள் | 57 |
| 4. | குறிப்பிட்ட அறக்கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 17 |
| | **கூடுதல்** | **38,655** |

2019–2020ஆம் ஆண்டில் புதிதாக 3 திருக்கோயில்கள் இத்துறையின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இத்துறை இணைய தளத்தில், இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் 44,121 சமய அறநிறுவனங்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறநிறவனங்களுடன், உபதிருக்கோயில்கள், கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தின் கீழ் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள், புதுக்கோட்டை மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தின் கீழ் உள்ள திருக்கோயில்கள் என 5,466 திருக்கோயில்களின் எண்ணிக்கையினையும் உள்ளடக்கியதாகும்.

**இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு**

**17.** இந்து சமய நிறுவனங்கள் அதன் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில், பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் பட்டியலைச் சாராத நிறுவனங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:–

| வ. எண். | சமய நிறுவனங்கள் வகைப்பாடு | நிறுவனத்தின் ஆண்டு வருமானம் | நிறுவனங்கள் எண்ணிக்கை மற்றும் சதவீதம் |
|---|---|---|---|
| 1. | பட்டியலைச் சாராத நிறுவனங்கள் சட்டப்பிரிவு–49(1) | ரூ.10,000/–க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை | 34,102<br>88.22% |
| 2. | பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் சட்டப்பிரிவு–46(i) | ரூ.10,000/–லிருந்து ரூ.2,00,000/–க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை | 3,550<br>9.18% |
| 3. | சட்டப்பிரிவு–46(ii) | ரூ.2,00,000/–லிருந்து ரூ.10,00,000/–க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை | 672<br>1.74% |
| 4. | சட்டப்பிரிவு–46(iii) | ரூ.10,00,000/–மும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் உள்ளவை | 331<br>0.86% |
| | | **கூடுதல்** | **38,655** |

## நிருவாக அமைப்பு

**18.** இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை முறைப்படுத்தவும் மற்றும் மேற்பார்வையிடவும், **1959** ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ் இந்து சமய

அறநிலையத்துறையின் நிருவாக தலைமைப் பொறுப்பில் ஆணையர் செயல்படுகிறார்.

**19.** இந்து சமய அறநிலையத்துறையின் பொது நிருவாகம், பணியாளரமைப்பு, சமய நிறுவனங்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் மேலாண்மை, திருப்பணி, வழக்குகள், தணிக்கை போன்ற பல்வேறு செயல்பாடுகளில் ஆணையருக்கு உதவியாக தலைமையிடத்தில் பல்வேறு அலுவலர்கள் பணிபுரிகின்றனர். அவர்கள் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பதவி | பணியிடம் |
|---|---|---|
| 1. | கூடுதல் ஆணையர் (பொது) | 1 |
| 2. | கூடுதல் ஆணையர் (விசாரணை) | 1 |
| 3. | கூடுதல் ஆணையர் (திருப்பணி) | 1 |
| 4. | இணை ஆணையர் (தலைமையிடம்) | 1 |
| 5. | இணை ஆணையர் (சட்டச்சேர்மம்) | 1 |
| 6. | இணை ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்) | 1 |
| 7. | இணை ஆணையர் (சரிபார்ப்பு– தலைமையிடம்) | 1 |
| 8. | உதவி ஆணையர் (சட்டச்சேர்மம்) | 1 |

| வ. எண் | பதவி | பணியிடம் |
|---|---|---|
| 9. | உதவி ஆணையர் (கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியம்) | 1 |
| 10. | ஆசிரியர் (திருக்கோயில் திங்களிதழ்) | 1 |

தலைமையிடத்தில் பணிபுரியும் மாற்றுத்துறை அலுவலர்கள் விவரம் பின்வருமாறு :–

| வ. எண். | பதவி | பணியிடம் | தாய்த் துறை |
|---|---|---|---|
| 1. | தனி அலுவலர் (திருக்கோயில் நிலங்கள்) (மாவட்ட வருவாய் அலுவலர் நிலை) | 2 | வருவாய்த்துறை |
| 2. | கண்காணிப்புப் பொறியாளர் | 1 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 3. | செயற் பொறியாளர் | 1 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 4. | உதவிக் கோட்டப் பொறியாளர் | 1 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 5. | உதவிப் பொறியாளர் / தொழில்நுட்ப உதவியாளர் | 1 | தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் |
| 6. | உதவிப் பொறியாளர் (கட்டுமானம்) | 1 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 7. | உதவிப் பொறியாளர் (மின்) | 1 | மின்துறை |
| 8. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 1 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |

| வ. எண். | பதவி | பணியிடம் | தாய்த் துறை |
|---|---|---|---|
| 9. | வரைதொழில் அலுவலர் | 2 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 10. | இளநிலை வரைதொழில் அலுவலர் | 2 | தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் |
| 11. | முதுநிலை கணக்கு அலுவலர் | 1 | கருவூலக் கணக்குத்துறை |
| 12. | உதவி கணக்கு அலுவலர் | 1 | கருவூலக் கணக்குத்துறை |
| 13. | தலைமைத் தணிக்கை அலுவலர் (அரசு துணைச் செயலாளர் நிலை) | 1 | நிதித்துறை |
| 14. | இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர் | 1 | செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை |

**மண்டல மற்றும் கோட்ட நிருவாகம்**

**20.** இந்து சமய அறநிலையத்துறையின் நிருவாகம் மாநில அளவில் 11 மண்டலங்களையும் 28 கோட்டங்களையும் உள்ளடக்கி ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஓர் இணை ஆணையரும், ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஓர் உதவி ஆணையரும் நியமிக்கப்பட்டு நிருவாகம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மண்டல இணை ஆணையர்கள் மற்றும் கோட்ட உதவி ஆணையர்களின்

வட்டார ஆளுகை எல்லை குறித்த விவரங்கள் பின்வருமாறு :–

| வ. எண். | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| 1. | இணை ஆணையர், சென்னை | 1. உதவி ஆணையர், சென்னை | சென்னை மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் பல்லாவரம் மற்றும் தாம்பரம் வட்டங்கள் |
| 2. | இணை ஆணையர், வேலூர் | 2. உதவி ஆணையர், திருவள்ளூர் | திருவள்ளூர் மாவட்டம் |
| | | 3. உதவி ஆணையர், காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் (பல்லாவரம் மற்றும் தாம்பரம் வட்டங்கள் நீங்கலாக) |
| | | 4. உதவி ஆணையர், வேலூர் | வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள் |
| 3. | இணை ஆணையர், சேலம் | 5. உதவி ஆணையர், தருமபுரி | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| | | 6. உதவி ஆணையர், சேலம் | சேலம் மாவட்டம் |
| | | 7. உதவி ஆணையர், நாமக்கல் | நாமக்கல் மாவட்டம் |

| வ. எண். | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| 4. | இணை ஆணையர், கோயம்புத்தூர் | 8. உதவி ஆணையர், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |
| | | 9. உதவி ஆணையர், ஈரோடு | ஈரோடு மாவட்டம் |
| | | 10. உதவி ஆணையர், திருப்பூர் | திருப்பூர் மாவட்டம் |
| 5. | இணை ஆணையர், தஞ்சாவூர் | 11. உதவி ஆணையர், தஞ்சாவூர் | தஞ்சாவூர் மாவட்டம் (திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் வட்டங்கள் நீங்கலாக) |
| | | 12. உதவி ஆணையர், நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் மாவட்டம் (மயிலாடுதுறை, சீர்காழி, குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள் நீங்கலாக) |
| | | 13. உதவி ஆணையர், திருவாரூர் | திருவாரூர் மாவட்டம் |
| 6. | இணை ஆணையர், மயிலாடுதுறை | 14. உதவி ஆணையர், கும்பகோணம் | தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர், கும்பகோணம் வட்டங்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள் |

| வ. எண். | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| 7. | இணை ஆணையர், விழுப்புரம் | 15. உதவி ஆணையர், கடலூர் | கடலூர் மாவட்டம் |
| | | 16. உதவி ஆணையர், விழுப்புரம் | விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் |
| | | 17. உதவி ஆணையர், திருவண்ணாமலை | திருவண்ணாமலை மாவட்டம் |
| 8. | இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி | 18. உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| | | 19. உதவி ஆணையர், அரியலூர் | பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் |
| | | 20. உதவி ஆணையர், புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம் |
| | | 21. உதவி ஆணையர், கரூர் | கரூர் மாவட்டம் |
| 9. | இணை ஆணையர், மதுரை | 22. உதவி ஆணையர், மதுரை | மதுரை மாவட்டம் |
| | | 23. உதவி ஆணையர், திண்டுக்கல் | திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள் |
| 10. | இணை ஆணையர், | 24. உதவி ஆணையர், | விருதுநகர் மாவட்டம் |

| வ. எண். | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| | சிவகங்கை | விருதுநகர் | |
| | | 25. உதவி ஆணையர், பரமக்குடி | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் |
| 11. | இணை ஆணையர், திருநெல்வேலி | 26. உதவி ஆணையர்,<br>27. திருநெல்வேலி | திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்கள் |
| | | 28. உதவி ஆணையர், தூத்துக்குடி | தூத்துக்குடி மாவட்டம் |
| | | 29. உதவி ஆணையர், நாகர்கோயில் | கன்னியாகுமரி மாவட்டம் |

## இந்து சமய அறநிலையத்துறையில் இணை ஆணையரின் பணிகள்

**21.** இந்து சமய அறநிலையத்துறையில் இணை ஆணையர், ஒரு மண்டல அலுவலராவார். சட்டப்பிரிவு **46**–ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்ட இந்து சமய அறநிறுவனங்கள் இணை ஆணையரின் ஆளுகையின் கீழ் உள்ளன. சட்டப்பிரிவு **46(i)**–ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்ட சமய நிறுவனங்களுக்கு பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமிக்கவும், சமய நிறுவனங்களின் வரவு செலவு

திட்டத்தினை அங்கீகரிக்கவும் இணை ஆணையருக்கு அதிகாரமுள்ளது. சட்டப்பிரிவு **63—**ன் கீழ் மனுக்களை விசாரித்து முடிவு எடுக்கவும், சட்டப்பிரிவு **64—**ன் கீழ் எந்தவொரு சமய நிறுவனத்திற்கும் நிர்வாகத்திட்டம் வகுக்கவும் இணை ஆணையருக்கு அதிகாரமுண்டு. சட்டப்பிரிவு **21**A**—**ன் கீழ் உதவி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை சீராய்வு செய்திட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு **46(i)—**ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்ட சமய நிறுவனங்களில் தவறிழைக்கும் அறங்காவலர்களை சட்டப்பிரிவு **53—**ன் கீழ் தற்காலிக பணி நீக்கம், பணிநீக்கம்/பணியறவு செய்ய இணை ஆணையருக்கு அதிகாரம் உள்ளது. மேலும், சட்டப்பிரிவு **54—**ன் கீழ் பரம்பரை அறங்காவலர் பதவியில் ஏற்படும் காலியிடங்களை நிரப்பவும் அதிகாரம் உள்ளது. சமய நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்கள், கட்டடங்களில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளை சட்டப்பிரிவு **78—**ன் கீழ் விசாரித்து வெளியேற்றுவதற்கு உத்தரவிடும் அதிகாரம் இணை ஆணையருக்கு உள்ளது. பொதுவான மற்றும் சிறப்பு உத்தரவுகளின் மூலம் ஆணையரால் ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

## இந்து சமய அறநிலையத்துறையில் உதவி ஆணையரின் பணிகள்

**22.** இந்து சமய அறநிலையத்துறையில் உதவி ஆணையர் ஒரு மாவட்ட நிலை அலுவலராவார். சட்டப்பிரிவு **46**–ன் கீழ் பிரசுரம் செய்யப்படாத இந்து சமய நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் உதவி ஆணையருக்கு உள்ளது. தனது ஆளுகையின் கீழுள்ள பட்டியலைச் சேராத சமய நிறுவனங்களுக்கு பரம்பரை அறங்காவலர் நியமனம் மற்றும் வரவு செலவு திட்டம் அங்கீகாரம் குறித்து ஆணை பிறப்பிக்கலாம். சமய நிறுவனங்கள் தொடர்பாக புகார்கள் வரப்பெற்றால் விசாரணை மேற்கொண்டு துறையின் ஆளுகையின்கீழ் கொண்டு வர முதனிலை அறிக்கை உதவி ஆணையரால் அளிக்கப்பட வேண்டும். சட்டப்பிரிவு **92**–ன் கீழ் உதவித்தொகை நிர்ணயம் மற்றும் தணிக்கை கட்டணம் நிர்ணயம் செய்வதற்குரிய அறிக்கையினை தயாரித்து ஆணையரிடம் அனுப்ப வேண்டும். சட்டப்பிரிவு **92**–ன் கீழ் நிர்ணயிக்கப்படும் உதவித்தொகை மற்றும் தணிக்கை கட்டணம் மற்றும் சட்டப்பிரிவு **93**–ன் கீழ் வழக்கு செலவுக்கான கட்டணம் ஆகியவற்றை உதவி ஆணையர் சமய நிறுவனங்களிடமிருந்து வசூலித்து இந்து சமய

அறக்கட்டளைகள் நிருவாக நிதிக் கணக்கில் செலுத்த வேண்டும். பொதுவான மற்றும் சிறப்பு உத்தரவுகளின் மூலம் ஆணையரால் ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

## இந்து சமய அறநிலையத்துறையில் ஆய்வாளர்களின் பணிகள்

**23.** இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரியும் மண்டல இணை ஆணையர்கள் மற்றும் கோட்ட உதவி ஆணையர்கள் ஆகியோருக்கு உதவி புரிய வட்ட அளவில் **168** ஆய்வர் பணியிடங்கள், துறை சார்ந்த வழக்குகளைக் கையாள **18** வழக்கு ஆய்வர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**24.** திருக்கோயில்களின் முறையான பராமரிப்பை உறுதி செய்வதற்கும், அவற்றின் சேவைகளை மேம்படுத்துவதற்கும் ஆய்வாளர்கள் திருக்கோயில்களை ஆய்வு செய்ய வேண்டும். மேலும், திருக்கோயில்களிலிருந்து சகாயத் தொகை மற்றும் தணிக்கை கட்டணங்கள், நீதிமன்றங்களால் விதிக்கப்படும் செலவு தொகைகள் மற்றும் பரிசீலனைக் கட்டணங்கள் ஆகியவற்றை அவர்கள் வசூலிக்க வேண்டும்.

**25.** ஆய்வாளர்கள் அறநிறுவனங்களின் சொத்துப் பதிவேடு, திட்டப் பதிவேடு மற்றும் மரப் பதிவேட்டினைப் பெற்று சரிபார்த்து அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்களிடமிருந்து வரப்பெறும் அனைத்து மனுக்கள் மற்றும் குறிப்புகளின் மீது விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளிக்க வேண்டும். அறங்காவலர்கள் நியமனத்திற்கான விண்ணப்பங்களை விசாரித்து சரிபார்த்து அறிக்கை அனுப்ப வேண்டும். ஏலம், ஒப்பந்தப்புள்ளி திறப்பு, உண்டியல் திறப்பு போன்றவற்றை மேற்பார்வையிட வேண்டும். துறை சார்ந்த வழக்குகளுக்காக நீதிமன்றங்கள் மற்றும் அரசு வழக்குரைஞர்களின் அலுவலகங்களுக்கு செல்ல வேண்டும். துறை ஆளுகையின் கீழ் உள்ள சமய நிறுவனங்களுக்கு உதவித் தொகை நிர்ணயம் செய்வதற்காக அவற்றின் வரவு செலவு பட்டியல்களைப் பெற்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். உயர் அதிகாரிகளால் ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**சரிபார்ப்பு அலுவலர்கள்**

**26.** சமய நிறுவனங்களின் விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்களை மதிப்பீடு செய்வதற்காக தலைமையிடத்தில் இணை

ஆணையர் நிலையில் ஒரு சரிபார்ப்பு அலுவலரும், ஏழு இணை ஆணையர் மண்டலங்களுக்குத் துணை ஆணையர் நிலையில் ஆறு சரிபார்ப்பு அலுவலர்களும், நான்கு இணை ஆணையர் மண்டலங்களுக்கு உதவி ஆணையர் நிலையில் நான்கு சரிபார்ப்பு அலுவலர்களும் பணிபுரிகின்றனர். ஒவ்வொரு சரிபார்ப்பு அலுவலருக்கும் உதவியாக ஒரு நகை மதிப்பீட்டு வல்லுநர் வீதம் 11 நகை மதிப்பீட்டு வல்லுநர்களும், ஒரு இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் வீதம் 11 இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்களும் பணிபுரிகின்றனர். 2016 ஆம் ஆண்டில் நகை மதிப்பீட்டு வல்லுநர் பதவிக்கும், இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கும் பெண்களை நியமனம் செய்யும் வகையில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**பொறியாளர்கள் மற்றும் ஸ்தபதிகள் பிரிவு**

**27.** திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளான, புதுப்பித்தல், பழைமை மாறாமல் புனரமைத்தல், கட்டுமானப் பணிகளுக்கான மதிப்பீடுகளை கூர்ந்தாய்வு செய்தல், பணிகளை மேற்பார்வையிடல், அளவீடு செய்தல் போன்ற பணிகளை பொறியாளர்கள் மற்றும் வரைதொழில் அலுவலர்கள் மேற்கொள்கின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் ஆணையிட்டவாறு இந்து சமய அறநிலையத்துறையில் கீழ்க்காணும் 175 பணியிடங்கள் கொண்ட திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பாதுகாத்தல் பணிக்கான பணித்தொகுதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **பதவி** | **பணியிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | தலைமைப் பொறியாளர் | 1 |
| 2. | கண்காணிப்புப் பொறியாளர் | 1 |
| 3. | செயற் பொறியாளர் | 8 |
| 4. | உதவி செயற் பொறியாளர் (கட்டுமா | 13 |
| 5. | உதவி செயற் பொறியாளர் (மின்) | 7 |
| 6. | உதவி பொறியாளர் (கட்டுமானம்) | 32 |
| 7. | உதவி பொறியாளர் (மின்) | 13 |
| 8. | தலைமை வரைதொழில் அலுவலர் | 2 |
| 9. | வரை தொழில் அலுவலர் | 13 |
| 10. | இளநிலை வரை தொழில் அலுவலர் | 32 |
| 11. | தலைமை ஸ்தபதி<br>( செயற்பொறியாளர் நிலையில்) | 1 |
| 12. | மண்டல ஸ்தபதி<br>(உதவி செயற்பொறியாளர் நிலையில் | 12 |
| 13. | உதவி ஸ்தபதி<br>(உதவி பொறியாளர் நிலையில்) | 30 |
| 14. | தட்டச்சர் | 6 |
| 15. | ஓட்டுநர் | 2 |
| 16. | அலுவலக உதவியாளர் | 2 |
| | **கூடுதல்** | 175 |

**வரைபடங்கள் மேலொப்பம் செய்தல் மற்றும் திருப்பணி மேற்கொள்ள கருத்து வழங்கும் ஆலோசனைக் குழு**

**28.** இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் தேவைப்படும் இனங்களில் வரைபடங்கள், இராஜகோபுரம், திருத்தேர்கள் வரைபடங்கள் போன்றவை மேலொப்பம் செய்தல் மற்றும் திருப்பணிகள் மேற்கொள்ள கருத்து வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு மாமல்லபுரம், அரசினர் கட்டட மற்றும் சிற்ப கலைக்கல்லூரி முதல்வரை தலைவராகவும், திருக்கோயில் திருப்பணிகளின் தன்மைக்கேற்றபடி அரசினர் கட்டட மற்றும் சிற்ப கலைக்கல்லூரி வல்லுநர் / பேராசிரியர் / உதவிப் பேராசிரியரை உறுப்பினராகவும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரியும் மண்டல ஸ்தபதியை உறுப்பினராகவும் கொண்ட ஆலோசனைக் குழுவினை கடந்த **02.07.2018** அன்று அமைத்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி திருக்கோயில்களுக்குள் ஏற்படுத்தப்படும் புதிய கட்டுமானங்கள் மற்றும் புதிய திருத்தேர்களுக்கு தயாரிக்கப்படும் வரைபடங்களை இக்குழு சரிபார்த்து மேலொப்பம் வழங்கி வருகிறது.

**மண்டல ஸ்தபதிகள்**

**29.** திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளையும், அங்கீகரிக்கப்பட்ட ஸ்தபதிகளால் செய்யப்படும் மதிப்பீடுகளை மேலாய்வு செய்யவும், வரைபடங்களைச் சரிபார்க்கவும் மாநில அளவில் ஐந்து மண்டல ஸ்தபதிகள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வந்தனர். **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் திருக்கோயில்களின் திருப்பணிகளில் ஏற்பட்ட தொய்வினைக் கண்ணுற்று, திருப்பணிகளை விரைந்து முடித்திட ஏதுவாக, **2012–2013**ஆம் நிதியாண்டில் ஆறு மண்டல ஸ்தபதிகள் பணியிடங்களை புதியதாக ஏற்படுத்தினார். **11** மண்டல ஸ்தபதிகளுக்கும் மாத தொகுப்பூதியம் ரூ.**4,000/–**லிருந்து ரூ.**15,000/–**ஆக உயர்வு செய்யப்பட்டது. அவ்வாறு ரூ.**15,000/–**ஆக உயர்த்தப்பட்ட தொகுப்பூதியம் திருக்கோயில்களின் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இதன் வாயிலாக ஒவ்வொரு இணை ஆணையர் மண்டலத்திற்கும் ஒரு ஸ்தபதி என்ற நிலை ஏற்பட்டு திருக்கோயில் திருப்பணிகள் பழைமை மாறாது மேற்கொள்ளப்படுகின்றன.

## திருக்கோயில் நிருவாகம்

**30.** ஒவ்வொரு திருக்கோயில் நிருவாகமும் அதன் நிருவாக அடிப்படையில் தனித்தன்மை கொண்டதாக விளங்குவதோடு அதற்கான பணியாளர்களை அந்நிருவாகமே நியமித்துக் கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன. எனினும், இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 45(1)–ன்படி செயல் அலுவலரை நியமிக்கும் அதிகாரம் ஆணையரைச் சார்ந்ததாகும்.

## செயல் அலுவலர்கள்

**31.** திருக்கோயில்களின் வருமானம், அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், அவற்றின் முக்கியத்துவம், பணிச்சுமை மற்றும் இதர பணிகளைக் கருத்திற்கொண்டு திருக்கோயில்களின் நிருவாகத்தைச் செம்மையுடன் நிருவகிக்க செயல் அலுவலர் பணியிடங்கள் பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ.எண். | செயல் அலுவலர் நிலை | பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | இந்திய ஆட்சிப்பணி | 2 |
| 2. | இணை ஆணையர் | 9 |

| | | |
|---|---|---|
| 3. | துணை ஆணையர் | 9 |
| 4. | உதவி ஆணையர் | 27 |
| 5. | செயல் அலுவலர் நிலை 1 | 66 |
| 6. | செயல் அலுவலர் நிலை 2 | 111 |
| 7. | செயல் அலுவலர் நிலை 3 | 250 |
| 8. | செயல் அலுவலர் நிலை 4 | 154 |
| | **கூடுதல்** | **628** |

செயல் அலுவலர் நிலை–**3** மற்றும் **4**–க்கான காலி பணியிடங்களுக்கு தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் தேர்ச்சி பெற்ற முறையே **101** மற்றும் **78** நபர்களுக்கு **2019–2020** ஆம் ஆண்டில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

**32.** திருக்கோயில்களின் ஆண்டு வருமானம் ரூ.**50** இலட்சத்திற்கும் அதிகமாக இருப்பின், அதன் நிருவாகத்தினை கவனித்திட இணை ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையிலான செயல் அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். அந்த வகையில் **47** முதுநிலைத் திருக்கோயில்கள் தற்போது நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

**நேர்முக உதவியாளர்கள்**

**33.** பழநி, திருச்செந்தூர், மதுரை, ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் மற்றும் திருத்தணி ஆகிய இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் பணிபுரியும் திருக்கோயில்களில் உதவி ஆணையர் நிலையில் நேர்முக உதவியாளர்கள் பணிபுரிகின்றனர்.

**துணை ஆணையர், பழநி**

**34.** பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் கல்வி நிறுவனங்களை நிருவகிப்பதில் இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உதவியாக துணை ஆணையர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார்.

**முதுநிலை கணக்கு அலுவலர்கள்**

**35.** இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் உள்ள கீழ்க்காணும் எட்டு திருக்கோயில்களில் அவர்களுக்கு உதவியாக மண்டலத் தணிக்கை அலுவலர்கள் நிலையில் முதுநிலை கணக்கு அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்:-

1. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு

2. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி

3. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்

5. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி

6. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை

7. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

8. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்

**திருக்கோயில்களில் பொறியியல் பிரிவு**

**36.** அனைத்து முக்கிய திருக்கோயில்களிலும் அத்திருக்கோயில்களுக்கென பொறியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு திருக்கோயில்களை புதுப்பித்தல் மற்றும் இதர புதிய கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திருமடங்களின் நிருவாகம்**

**37.** இந்து சமய அறநிலையத்துறையின் மேற்பார்வையில் தற்போது **56** திருமடங்கள் உள்ளன. இத்திருமடங்களின் நிருவாகத்தைக் கண்காணிக்க ஒரு

மண்டலத் தணிக்கை அலுவலர், ஒரு கண்காணிப்பாளர், இரண்டு ஆய்வாளர்கள், இரண்டு தணிக்கை ஆய்வாளர்கள், இரண்டு உதவியாளர்கள், இரண்டு இளநிலை உதவியாளர்கள் மற்றும் ஒரு தட்டச்சர் கொண்ட ஒரு பிரிவு ஆணையருக்கு உதவியாக தலைமையிடத்தில் செயல்படுகிறது.

**திருமடங்கள் – ஒரு பார்வை**

**38.** இந்து சமயத்தையும், தமிழையும் நிலைநிறுத்துவதில் திருக்கோயில்களும், திருமடங்களும் முதன்மைப் பங்காற்றி வருகின்றன. இவற்றில் திருமடங்கள் அறவழியையும், இறைச்சிந்தனையையும், குருவின்வழி சீடர்கள் என்ற பரம்பரைப் பழக்கவழக்கத்தையும், கல்வித் தொண்டினையும், சைவ–வைணவ நெறிகளையும் வாழையடி வாழையாக வளர்த்து வருகின்றன.

திருமடங்கள் தொன்றுதொட்டு இறைப்பணியுடன் அறப்பணியையும் ஆற்றி வருகின்றன. தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின்கீழ் **56** திருமடங்களும், திருமடங்களின் நிர்வாகத்திற்குட்பட்ட **57** திருக்கோயில்களுடன் இணைந்த **19** கட்டளைகளும் நடைபெற்று வருகின்றன.

**39.** திருமடங்களுள் சைவ நெறியை மதுரை ஆதீனம் என்றழைக்கப்படும் திருஞானசம்பந்தர் சுவாமிகள் மடம், திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், குன்றக்குடி ஆதீனம் ஆகியவையும் வைணவ நெறியை அகோபில மடம், வானமாமலை மடம் ஆகியவையும், காஞ்சிபுரத்திலுள்ள சங்கராச்சாரியார் மடம் சக்திபீட வழிபாட்டு நெறியை வளர்க்கும் பணியில் பல்லாண்டுகளாகத் தொண்டாற்றி வருகின்றன.

**40.** மொழிகளுள் பக்திமொழி என வழங்கப்படும் தமிழ் மொழியின் வளர்ச்சியில் திருமடங்களின் பங்கு அளப்பரியதாகும். சங்ககால இலக்கியங்களை இன்று நாம் படிப்பதற்கும், படித்து இன்புறுவதற்கும் காரணம் திருமடங்களாகும். ஓலைச்சுவடிகளாய் இருந்த பண்டைய தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து இன்றைய தலைமுறையினரும் தமிழின், தமிழரின் தொன்மையை உணர்வதற்கு திருமடங்கள் பெரும்பங்கு ஆற்றியுள்ளன.

**41.** தமிழகத்தில் மன்னர்களிடம் ஆட்சிமாற்றம் ஏற்படும்போது, அரசகுருவாக இருப்பவர் செங்கோலைப் புதிய மன்னருக்குக் கொடுத்து ஆட்சி மாற்றம் செய்வதை மரபாகப் பின்பற்றியுள்ளனர். விடுதலை இந்தியாவின்

தலைமை ஆளுநரான (கவர்னர் ஜெனரல்) மௌன்ட்பேட்டன் பிரபு இந்தியாவிற்கு விடுதலை வழங்கும்போது எவ்வகையில் வழங்குவது என அப்போதைய பேராயக் (காங்கிரஸ்) கட்சியின் தலைவரான திரு.ஜவஹர்லால் நேருவிடம் கேட்டுள்ளார். இதனை மூதறிஞர் இராஜாஜியிடம் திரு.ஜவஹர்லால் நேரு வினவ, இராஜாஜி தமிழகத்தில் பின்பற்றப்படும் மேற்குறிப்பிட்ட மரபைக் கூறியுள்ளார்.

**42.** அதன் அடிப்படையில் ஆட்சி மாற்றத்தை எடுத்துக் காட்டும் நிகழ்வாகச் செங்கோலைத் தலைமை ஆளுநரிடமிருந்து திருவாவடுதுறை ஆதீன தம்பிரான் வழியாக ஜவஹர்லால் நேரு பெறுவதென முடிவெடுக்கப்பட்டது. திருவாவடுதுறை ஆதீனம் தம்பிரான் பண்டார சுவாமிகளிடம் ஓதுவார்கள், தேவாரத்திலிருந்து கோளறு பதிகம் பாடல்களைப் பாடும்போது அதில் பதினோராவது பாடலின் கடைசி வரியான "**...அடியார்கள் வானில் அரசாள்வார் ஆணை நமதே...**" என்ற வரியைப் பாடி முடிக்கும்போது தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளிச் செங்கோலைச் சுவாமிகள் நேருவிடம் கொடுத்தார். அந்நாள் **15.08.1947** நம்நாட்டின் விடுதலை நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**43.** நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், தருமபுர ஆதீனத்தின் **26–**வது குரு மகா சன்னிதானமாக செயலாற்றி வந்த ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமசாரியார் சுவாமிகள் **04.12.2019** அன்று பரிபூர்ணம் அடைந்ததைத் தொடர்ந்து, ஸ்ரீ மௌன குருசாமி தம்பிரான் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்தர் என்ற நாமகர்ணத்தில் குருமகா சந்நிதானமாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**44. 'கல்வியிலான் கண்ணிலான் என்க'** என்பதை உணர்ந்த அறநிறுவனமான திருமடங்கள் கல்விப் பணிகளையும் சீரிய முறையில் ஆற்றி வருகின்றன.

**தொடக்கப் பள்ளிகள்**

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூரில் திருவாவடுதுறை ஆதீனம் தொடக்கப் பள்ளி என்ற பெயரிலும், தருமபுர ஆதீனம், தருமபுரத்தில் குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி என்ற பெயரிலும் பள்ளிகளை நடத்தி வருகின்றன.

**நடுநிலைப் பள்ளிகள்**

திருவாவடுதுறை ஆதீனம் நடுநிலைப் பள்ளி மற்றும் திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர்

நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகள் நாகப்பட்டினம் மாவட்டம், திருவாவடுதுறையில் இயங்கி வருகின்றன.

**உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி**

நாகப்பட்டினம் மாவட்டம், தருமபுரத்தில் குருஞானசம்பந்தர் மடம் உயர்நிலைப் பள்ளியையும், விழுப்புரம் மாவட்டம், மயிலத்தில், சிவப்பிரகாச சுவாமிகள் மடம் மேல்நிலைப் பள்ளியையும் அறவுணர்வோடு கல்விப் பணியைச் செயல்படுத்தி வருகின்றன.

மேற்கண்ட திருமடங்கள் மக்களுக்கு இறைத்தொண்டினை ஆற்றி வருகின்றன.

**இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கை**

**45.** இந்து சமய அறநிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்திட ஆணையரின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டின் கீழ் தலைமைத் தணிக்கை அலுவலர் தலைமையில் தணிக்கைப்பிரிவு இயங்கி வருகிறது.

**46** தமிழகம் முழுவதுமுள்ள சமய நிறுவனங்களின் தணிக்கையினை மேற்கொள்ள தணிக்கைப் பிரிவானது **19** மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு **2** துணை தலைமைத் தணிக்கை அலுவலர்களும், **17** மண்டலத் தணிக்கை

அலுவலர்களும், இவர்களுக்கு உதவியாக **27** உதவி தணிக்கை அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இதனைத் தவிர்த்து ஒரு மண்டலத் தணிக்கை அலுவலரும் (நடமாடும் தணிக்கைக் குழு), ஒரு உதவி தணிக்கை அலுவலரும் தலைமையிடத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

**47.** முதுநிலை திருக்கோயில்களின் தணிக்கை மறுப்புகளை தீர்வு செய்திட கீழ்க்காணுமாறு மூன்று நிலைகளிலான உயர்மட்ட தணிக்கைக் குழுக்கள் உள்ளன:-

I. முதல் நிலை தணிக்கைக் குழு (இணை ஆணையர் / செயல் அலுவலர் நிலை திருக்கோயில்கள்)

| | | |
|---|---|---|
| 1. | ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை | தலைவர் |
| 2. | இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை | உறுப்பினர் |
| 3. | தலைமைத் தணிக்கை அலுவலர், இந்து சமய அறநிலையத்துறை | உறுப்பினர் செயலாளர் |

II. இரண்டாம் நிலை தணிக்கைக் குழு (துணை ஆணையர் / செயல் அலுவலர் நிலை திருக்கோயில்கள்)

| | | |
|---|---|---|
| 1. | கூடுதல் ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை | தலைவர் |

| | | |
|---|---|---|
| 2. | இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை | உறுப்பினர் |
| 3. | தலைமைத் தணிக்கை அலுவலர், இந்து சமய அறநிலையத்துறை | உறுப்பினர் செயலாளர் |

III. மூன்றாம் நிலை தணிக்கைக் குழு (உதவி ஆணையர் / செயல் அலுவலர் நிலை திருக்கோயில்கள்)

| | | |
|---|---|---|
| 1. | மண்டல இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை | தலைவர் |
| 2. | துணைத் தலைமைத் தணிக்கை அலுவலர் / மண்டல தணிக்கை அலுவலர், இந்து சமய அறநிலையத்துறை | உறுப்பினர் செயலாளர் |

**ஆலோசனைக் குழு**

**48. 1959** ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் இந்து சமய நிறுவனங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழு அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த குழுவில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் தலைவராகவும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் துணைத் தலைவராகவும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசுச் செயலாளர் அலுவல்சார் உறுப்பினராகவும்,

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவல்சார் உறுப்பினர் செயலராகவும் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர்.

**மாவட்டக் குழுக்கள் அமைத்தல்**

**49.** இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருவாய் மாவட்ட எல்லைக்குட்பட்ட இந்து சமய அறநிறுவனங்களுக்கு பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரிக்க மூன்றுக்குக் குறையாத ஐந்துக்கு மிகாத அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்டக் குழு அரசால் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இக்குழு பத்து இலட்சம் ரூபாயும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களைத் தவிர, பிற அறநிறுவனங்களுக்கு பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரித்து அளிக்க வேண்டும். இக்குழுவின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். பெரும்பாலான வருவாய் மாவட்டங்களில் மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**அறங்காவலர்கள் நியமனம்**

**50.** இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ் இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை மேலாண்மை செய்வதற்காக பரம்பரை நிருவாகத்தில் இல்லாத ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலும் மூன்று அறங்காவலர்களுக்கு குறையாமலும், ஐந்து அறங்காவலர்களுக்கு மிகாமலும் உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும். இக்குழுவில் பெண் உறுப்பினர் ஒருவரும் பட்டியல் இனத்தவர் அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த உறுப்பினர் ஒருவரும் இடம்பெற வேண்டும். இக்குழுவின் பதவிக்காலம் இரண்டாண்டுகள் ஆகும்.

**அறங்காவலர் நியமனத் தகுதிகள்**

51. **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களது அறிவுரையின்படி இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 25A-ன் கீழ் இந்து சமய அறநிறுவனங்களில் அறங்காவலராக நியமனம்

பெறுவதற்கு கீழ்க்காணும் தகுதி வரையறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| அ. | கடவுள் நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும்; |
| ஆ. | சமய நிறுவனம் அமைந்துள்ள பகுதியில் நன்னடத்தை, நற்பெயர் மற்றும் மரியாதைக்குரியவராக இருத்தல் வேண்டும்; |
| இ. | திருக்கோயில் அறங்காவலர் பணியினைச் செய்வதற்கு தேவையான நேரத்தையும், ஆர்வத்தையும் பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும்; மற்றும் |
| ஈ. | இதுபோன்ற குறிப்பிட்ட பிற சிறப்புத் தகுதிகளைக் கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும். |

**அறங்காவலர்களை நியமனம் செய்ய அதிகார வரம்பு**

**அரசு**

**52.** இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு **46(iii)—**ன் கீழ் உள்ள, ரூபாய் பத்து இலட்சம் மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு ஐந்து பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்கள் அரசால் நேரடியாக நியமிக்கப்படுவர்.

**ஆணையர்**

**53.** இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு **46(ii)–**ன் கீழ் உள்ள, ரூபாய் இரண்டு இலட்சத்திலிருந்து ரூபாய் பத்து இலட்சத்திற்குள் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்கள் மாவட்ட குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் ஆணையரால் நியமிக்கப்படுவர்.

**இணை ஆணையர்**

**54.** இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு **46(i)–**ன் கீழ் உள்ள, ரூபாய் பத்தாயிரத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சத்திற்குள் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்கள் மாவட்ட குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் அந்தந்த மண்டல இணை ஆணையரால் நியமிக்கப்படுவர்.

**உதவி ஆணையர்**

**55.** இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு **49(1)–**ன் கீழ் உள்ள ரூபாய் பத்தாயிரத்திற்கும்

குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்கள் மாவட்ட குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் அந்தந்த கோட்ட உதவி ஆணையரால் நியமிக்கப்படுவர்.

**56.** ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோரால் பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்கள் நியமிக்கப்படும்போது, இந்து சமய அறநிறுவனங்களில் கூடுதலாக இரண்டு பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்கள் நியமனம் தேவையெனில், அரசு நியமனம் (Nomination) செய்யலாம்.

**தக்கார் நியமனம்**

**57.** அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் முடிந்த பின்னர் அல்லது தற்காலிகமாக காலியிடம் ஏற்படும்பொழுது அடுத்த அறங்காவலர் குழு நியமனம் செய்யப்படும் வரை, திருக்கோயிலின் அறங்காவலருக்குரிய கடமைகளை செய்திட இடைக்கால ஏற்பாடாக தகுதியான ஒருவர் தக்காராக நியமனம் செய்யப்படுவார்.

## II - இந்து சமய அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்கள் நிருவாகம்

### நிலங்களின் விவரம்

**58.** இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமாக **4,78,272.34** ஏக்கர் பரப்பளவுடைய நிலங்கள் கீழ்க்காணும் விவரப்படி உள்ளன:—

| நிலத்தின் வகைப்பாடு | திருக்கோயில் நிலங்கள் | திருமடம் நிலங்கள் | மொத்த நிலங்கள் |
|---|---|---|---|
| | (ஏக்கர் இலட்சத்தில்) | | |
| நன்செய் | 1.83 | 0.21 | 2.04 |
| புன்செய் | 2.18 | 0.35 | 2.53 |
| மானாவாரி | 0.21 | இல்லை | 0.21 |
| **கூடுதல்** | **4.22** | **0.56** | **4.78** |

**59.** இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான **22,600** கட்டடங்களும், **33,665** மனைகளும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. விவசாய நிலங்கள் **1,23,729** நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அசையாச் சொத்துக்களிலிருந்து கடந்த ஒன்பது ஆண்டுகளில் ரூ.**1219.65** கோடி வருமானம் வரப்பெற்றுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, ரூ.**135.06** கோடி வருமானம் வரப்பெற்றுள்ளது.

**நியாய வாடகை நிர்ணயம்**

**60.** இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்கு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் 1959, சட்டப்பிரிவு 34A-ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின்படி மண்டல இணை ஆணையர், திருக்கோயில் செயல் அலுவலர் அல்லது அறங்காவலர் அல்லது அறங்காவலர் குழுத் தலைவர், பதிவுத்துறையின் மாவட்டப் பதிவாளர் ஆகியோர் கொண்ட நியாய வாடகை நிர்ணயக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நியாய வாடகை நிர்ணயக் குழுவின் மூலமாக வணிகம், குடியிருப்பு போன்ற பயன்பாடுகள் உள்ள மனைகள் மற்றும் கட்டடங்களுக்கு உரிய நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

**வருவாய் நீதிமன்றங்கள்**

**61.** இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களுக்கு வரவேண்டிய குத்தகை நிலுவைத் தொகைகளை வசூல் செய்யவும், விவசாய நிலங்களுக்கு நியாய வாடகை நிர்ணயிக்கவும், குத்தகை செலுத்த மறுக்கும் குத்தகைதாரர்களை வெளியேற்றவும், தமிழ்நாடு

பொது பொறுப்புரிமை (விவசாய நிலங்கள் ஒழுங்குபடுத்தும் மற்றும் மேலாண்மை) சட்டம், 1961 [Tamil Nadu Public Trusts (Regulation and Administration of Agricultural Lands) Act, 1961]-ன் கீழ் இந்து சமய அறநிறுவனங்களால் தனி துணை ஆட்சியர் தலைமையிலான வருவாய் நீதிமன்றங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவை தீர்வு செய்யப்படுகின்றன.

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், மதுரை, லால்குடி, மன்னார்குடி, நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

கும்பகோணம், சேலம் மற்றும் தென்காசி ஆகிய இடங்களில் முகாம் வருவாய் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

**62.** மேற்கண்ட வருவாய் நீதிமன்றங்களில் லால்குடி, மன்னார்குடி, நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 4 இடங்களில் உள்ள வருவாய் நீதிமன்றங்கள் 2012–2013 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதன் வாயிலாக வருவாய் நீதிமன்றங்களில் இதுவரை தாக்கல் செய்யப்பட்டுள்ள 9317 வழக்குகளில், 2019–2020 ஆம் நிதி

ஆண்டில் மட்டும் **2936** வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு, ரூ.**1060.14** இலட்சம் குத்தகை நிலுவைத் தொகை வசூலிக்க உத்தரவு பெறப்பட்டு ரூ.**331.09** இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் மொத்தம் ரூ.**1875.20** இலட்சம் குத்தகை நிலுவை வசூலிக்கப்பட்டுள்ளது. குத்தகை நிலுவையை முழுமையாக வசூலித்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நிலங்களை மீட்டல்**

**63.** இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான சில நிலங்கள் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்ட (Updating Registry Scheme) செயலாக்கத்தின் போது தனிப்பட்ட நபர்களின் பெயரில் தவறாக பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையை மாற்றி, மீண்டும் அந்தந்த திருக்கோயில்களின் பெயரிலேயே பட்டா பெறுவதற்காக மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இரு மாவட்ட வருவாய் அலுவலர்கள் தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**64.** கடந்த ஒன்பது ஆண்டுகளில் தனியார் பெயரில் தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்ட **1199**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான **8031.19** ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களை கண்டறிந்து, சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. **2019–2020** ஆம் ஆண்டில் மட்டும் **194** திருக்கோயில்களுக்குச் சொந்தமான **1448.38** ஏக்கர் நிலங்கள் மீண்டும் திருக்கோயில்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**65.** கடந்த ஒன்பது ஆண்டுகளில் **173** திருக்கோயில்களுக்குச் சொந்தமான **778.29** ஏக்கர் பரப்பளவை உள்ளடக்கிய நிலங்களின் பதிவுகள் கணினி சிட்டாவில் தவறாக தனியார் பெயரில் இருந்ததை மீண்டும் திருக்கோயில் பெயரில் பதிவு செய்யப்பட்டது. **2019–2020** ஆம் ஆண்டில் **17** திருக்கோயில்களுக்குச் சொந்தமான **103.89** ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலங்கள் தனியார் பெயரிலிருந்து திருக்கோயில் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**66.** மேலே குறிப்பிட்டவாறு திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டவைகளையும், கணினி சிட்டாவில் தனி நபர் பெயரில் பதிவு செய்யப்பட்டவைகளையும், மாநிலம் முழுவதும்

கண்டறிந்து திருக்கோயில்களின் பெயருக்கு மாற்ற துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ஓய்வுபெற்ற துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் நில அளவையர்கள் நியமனம்

**67.** இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை தனிப்பட்ட நபர்களின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டிருந்ததை கண்டறிந்து மீண்டும் திருக்கோயில் பெயரில் பட்டா மாற்றம் செய்திட மற்றும் திருக்கோயில் நிருவாகம் மற்றும் வருவாய்த் துறையினரிடையே ஒருங்கிணைந்து செயல்பட, தொகுப்பூதிய அடிப்படையில் **9** ஓய்வுபெற்ற துணை ஆட்சியர்கள், **21** ஓய்வுபெற்ற வட்டாட்சியர்கள், **17** ஓய்வுபெற்ற நில அளவையர்கள், **3** ஓய்வுபெற்ற வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் **10** ஓய்வுபெற்ற கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**68.** கடந்த ஒன்பது ஆண்டுகளில் இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான, ஆக்கிரமிப்பில் இருந்த **3156.63** ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களும், **604.1969** கிரவுண்டு பரப்பளவுள்ள மனைகளும், **280.1397** கிரவுண்டு

பரப்பளவுள்ள கட்டடங்களும் திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளன. இவற்றின் சந்தை மதிப்பு சுமார் ரூ.3365.64 கோடியாகும். இவற்றில் 2019–2020 ஆம் ஆண்டில் மட்டும் 301.27 ஏக்கர் விளை நிலங்கள் 47.1324 கிரவுண்டு மனை மற்றும் 29.1884 கிரவுண்டு பரப்பளவுள்ள கட்டடங்கள் சுவாதீனம் பெறப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூ.157.22 கோடி ஆகும்.

**கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல்**

**69.** இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான காலி மனைகளைக் குடியிருப்புக்காக கூட்டாக ஆக்கிரமித்து 30 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வருபவர்களை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வாடகைதாரர்களாக வரன்முறைப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது:-

i) 30 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்பு நோக்கத்திற்காக மட்டும் நிலம் பயன்படுத்தியிருக்க வேண்டும்;

ii) அரசாணையின்படி நிர்ணயிக்கப்பட்ட நியாய வாடகையை ஏற்றுக் கொள்ள வேண்டும்;

iii) நியாய வாடகை நிர்ணயம் 01.07.1998 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட வேண்டும்;

iv) வாடகை நிலுவைத் தொகை **12** மாதங்களில் சம தவணைகளில் செலுத்திட வேண்டும்;

v) **10** மாத வாடகை நன்கொடையாக வழங்கிட வேண்டும்.

இதன்படி, பல்வேறு இடங்களில் **300.06** ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்த **6159** ஆக்கிரமிப்பாளர்கள் வாடகைதாரர்களாக வரன்முறை செய்யப்பட்டுள்ளனர். அவர்களது குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி, மின் இணைப்பு வசதி போன்றவற்றிற்கு தடையின்மைச் சான்றுகள் வழங்கப்பட்டன.

## III - சிறப்புத் திட்டங்கள்

### அன்னதானத் திட்டம்

**70. 'ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்'**

என்ற திருவள்ளுவரின் வரிகளுக்கு ஏற்ப திருக்கோயிலுக்கு வரும் இறையன்பர்களுக்கு அருளுடன் பசியாற்றிட, **2002** ஆம் ஆண்டு மார்ச் திங்கள் **23** ஆம் நாள் சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா**

அவர்களால், திட்டங்களில் மிகவும் உன்னத திட்டமான அன்னதானத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இறையன்பர்களுக்கு இறையருளோடு அன்னமும் வழங்கும் உன்னதத் திட்டம் படிப்படியாக 360 திருக்கோயில்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. 2006–2007 முதல் 2010–2011 ஆம் ஆண்டு வரை இரண்டு திருக்கோயில்களுக்கு மட்டுமே இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

71. 2011–2012 ஆம் ஆண்டில் 106 திருக்கோயில்களுக்கும், 2012–2013 ஆம் ஆண்டில் 50 திருக்கோயில்களுக்கும், 2013–2014 ஆம் ஆண்டில் 100 திருக்கோயில்களுக்கும், 2014–2015 ஆம் ஆண்டில் 106 திருக்கோயில்களுக்கும், 2016–2017 ஆம் ஆண்டில் 30 திருக்கோயில்களுக்கும் பக்தர்களின் வருகையையும், தேவையையும் கருத்திற்கொண்டு இந்த அற்புதத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

72. இத்திட்டத்தின் மூலம் 754 திருக்கோயில்களில் நாளொன்றுக்கு சுமார் 65,925 பக்தர்கள் பயன்பெறுகின்றனர். இதற்கென நாளொன்றுக்கு ரூ.16.48 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

**அன்னதான பற்றாக்குறை நிதி :**

**73.** அன்னதானத் திட்டத்தில் நிதி பற்றாக்குறை உள்ள திருக்கோயில்களுக்கு, உபரி நிதி வசதி உள்ள திருக்கோயில்களிலிருந்து அறநிலைய சட்டப்பிரிவு **36**ன் கீழ் நிதிமாற்றம் மூலம் மைய நிதி ரூ.**20** கோடி உருவாக்கப்பட்டு, அம்மைய நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையை கொண்டு பற்றாக்குறை உள்ள அன்னதானத் திட்ட திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கி ஈடு செய்யப்படுகிறது.

**பற்றாக்குறை நிதியுதவி வழங்கப்பட்ட விவரம்**

| நிதியாண்டு | திருக்கோயில்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 2016–2017 | 63 | 2,32,25,641.00 |
| 2017–2018 | 73 | 2,82,00,476.23 |
| 2018–2019 | 38 | 1,76,67,788.00 |
| 2019–2020 (பிப்ரவரி மாதம் வரை) | 54 | 4,38,85,435.00 |

**நாள் முழுவதும் அன்னதானம்**

**74.** கடந்த **13.09.2012** அன்று ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் நாள் முழுவதும்

அன்னதானம் வழங்கும் திட்டம் **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அன்றே, பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலிலும் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு மொத்தம் **8390** பக்தர்கள் பயன்பெறுகின்றனர் மற்றும் இதற்கென நாளொன்றுக்கு இவ்விரண்டு திருக்கோயில்களால் சுமார் ரூ.**2.07** இலட்சம் செலவிடப்படுகின்றது. பக்தர்கள் காலை எட்டு மணி முதல் இரவு பத்து மணி வரை எப்பொழுது வேண்டுமானாலும் உணவு அருந்தலாம். இத்திட்டம் பக்தர்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.

**ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள்**

75. **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் விருப்பப்படி பண்டைய தமிழ் இலக்கியங்களில் உள்ள நற்பண்புகள், நீதிநெறி கருத்துக்களை கதைகள் வாயிலாக குழந்தைகளின் மனதில் ஆழப்பதிந்திட, சனிக்கிழமைதோறும் ஆன்மீக மற்றும் நீதிநெறி வகுப்புகள் முக்கிய திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியருக்கு இனிப்பு, கார வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆன்மீக ஒழுக்கநெறி வகுப்புகள் **2019–2020** ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை, **334** திருக்கோயில்களில் நடத்தப்பட்டதில் **16,684** மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

**சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்**

**76.** ஆண்டுதோறும் முக்கிய திருக்கோயில்களில் சுதந்திரத் திருநாள், பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய தினங்களில் அனைத்துச் சமுதாய மக்களும் ஏற்றத் தாழ்வின்றி பங்கு பெறும் வகையில், சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் நடத்தப்படுகின்றன. சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் **2019–2020** ஆம் ஆண்டு சுதந்திரத் திருநாளில் **444** திருக்கோயில்களிலும், பேரறிஞர் அண்ணா நினைவு நாளில் **317** திருக்கோயில்களிலும் சிறப்புடன் நடத்தப்பட்டன.

**யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்**

**77.** “மனிதர்கள் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் நம்முடைய இரக்கத்திற்கும் அன்புக்கும்

உரியவைதான்'' என்ற **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது உயரிய எண்ணத்தின்படி, யானைகளின் உடல் நலமும், மன நலமும் பேண அவற்றின் உடல் நலனுக்கேற்ற குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் ''யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்'' நடத்தப்பட்டு வருகிறது. **2003, 2004, 2005** ஆம் ஆண்டுகளில் திருக்கோயில்கள் மற்றும் தனியாரால் பேணப்பட்ட யானைகளுக்கு குளிர்ந்த இயற்கை சூழ்நிலையில் முதுமலை, தெப்பக்காடு பகுதியில் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் நடத்தப்பட்டது. **2006–2007** முதல் **2010–2011** வரை கைவிடப்பட்ட இம்முகாம், **2011–2012** ஆம் நிதியாண்டில் மீண்டும் **14.12.2011** முதல் **48** நாட்கள் முதுமலை, தெப்பக்காடு பகுதியில் சிறப்புற நடைபெற்றது.

**78. 2012–2013** ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகில் பவானி ஆற்றங்கரையில் இம்முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சார்ந்த **34** யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத் திருக்கோயிலைச் சார்ந்த ஒரு யானையும்

பங்கேற்று பயனடைந்துள்ளன. அது முதல் சராசரியாக 31 யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் கலந்து கொண்டு வருகின்றன.

79. 2018–2019 ஆம் ஆண்டு நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சார்ந்த 27 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்துள்ளன. 2019–2020 ஆம் ஆண்டு நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சார்ந்த 26 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்துள்ளன. இம்முகாமில் பங்கேற்க இயலாத திருக்கோயில் மற்றும் திருமடங்களைச் சார்ந்த யானைகளுக்கு முகாமில் வழங்கப்பட்டது போலவே ஊட்டச்சத்து உணவுகளும், மருந்துகளும் தேவைக்கேற்ப வழங்கப்பட்டு, அவற்றின் மன நலமும் உடல் நலமும் பேணப்பட்டன. இம்முகாமில், யானைகளின் நலவாழ்விற்கான முறையான உடற்பயிற்சிகள், உணவு மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன. மேலும், யானைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான பல்வேறு

பயிற்சிகள் யானைப் பாகன்கள்/உதவி பாகன்களுக்கு அளிக்கப்பட்டது மட்டுமின்றி, அவர்கள் தமது உடல் நலம் பேணவும் பயிற்சி அளிக்கப்பட்டது. இம்முகாமிற்கு அரசு மானியமாக ரூ.1.41 கோடி வழங்கப்பட்டது.

**ஏழை எளியோர்களுக்கான திருமணத் திட்டம்**

80. 1981 ஆம் ஆண்டு, **அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்** அவர்களால் இந்து சமயத்தைச் சார்ந்த ஏழை எளிய மக்களுக்கு நிதி வசதிமிக்க திருக்கோயில் உபரிநிதியிலிருந்து திருமணம் செய்து வைக்க இத்திருமணத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பயன்பெற்றனர். **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் தலைமையேற்று 2002 ஆம் ஆண்டு 1008 இணைகளுக்கும், 2003 ஆம் ஆண்டு 1053 இணைகளுக்கும் திருமணங்கள் திருவேற்காட்டில் நடத்தி வைத்தார்கள். மேலும், 489 இணைகளுக்குச் சில திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்பட்டன.

இத்திட்டம் **2006–2007** முதல் **2010–2011** வரை கைவிடப்பட்டது. **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது ஆணையின்படி **2012–2013** ஆம் ஆண்டில் ஒரு இணைக்கு நான்கு கிராம் தங்க திருமாங்கல்யம் மற்றும் ரூபாய் பத்தாயிரம் செலவில் சீர்வரிசைப் பொருட்கள் என்ற விகிதத்தில் **1006** இணைகளுக்கு **18.06.2012** அன்று திருவேற்காடு திருக்கோயில் அருகில் திருமணம் சிறப்பாக நடத்தப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ.**1.51** கோடி செலவிடப்பட்டது.

**கம்பிவட ஊர்திகள்**

**81.** பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்காக முதல் முறையாக நான்கு கோடி ரூபாய் செலவில் கம்பி வட ஊர்தி அமைத்திட **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் ஆணையிடப்பட்டு, **2004** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள் கம்பிவட ஊர்தி சேவை தொடங்கப்பட்டது. இந்தக் கம்பிவட ஊர்தி பக்தர்களின் வரவேற்பு பெற்றதையடுத்து, வேலூர் மாவட்டம், சோளிங்கர், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில் மற்றும் கரூர் மாவட்டம், அய்யர்மலை,

அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் ஆகியவற்றுக்குப் புதிதாக கம்பிவட ஊர்தி அமைத்திட ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில், உலகத் தரத்தில் கூடுதல் பயணியர் இருக்கை வசதியுடன் கூடிய இரண்டாவது கம்பிவட ஊர்தி ரூ.70 கோடி மதிப்பீட்டில் அமைத்திட ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

**மின்கல மகிழுந்துகள்**

**82.** ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு 2011 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ஆம் நாள் **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆறு இருக்கைகள் கொண்ட மின்கல மகிழுந்து ஒன்றினை மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள். இத்திட்டம் பக்தர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. பின்வரும் பதினொன்று திருக்கோயில்களில் மின்கல மகிழுந்துகள் பயன்பாட்டில் உள்ளன:-

| வ. எண். | திருக்கோயில் பெயர் | மகிழுந்து எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் | 3 |
| 2. | பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் | 3 |
| 3. | திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் | 3 |
| 4. | திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் | 1 |
| 5. | திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் | 1 |
| 6. | திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் | 1 |
| 7. | திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் | 1 |
| 8. | திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில் | 1 |
| 9. | மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் | 2 |
| 10. | இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் | 3 |
| 11. | மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் | 2 |
| | **கூடுதல்** | **21** |

**கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களுக்கான அரசு மானியம்**

**83.** கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள **490** திருக்கோயில்கள், ஒரு மகளிர் கல்லூரி, ஒரு மேல்நிலைப்பள்ளி மற்றும் இரண்டு உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றை நிருவகிக்க போதுமான நிதிவசதி இல்லை என்பதை அறிந்து, செம்மையான நிருவாகத்தை மேற்கொள்ள ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்ததை **2013–2014** ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாயாக உயர்வு செய்து **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் ஆணையிடப்பட்டு, உயர்த்தப்பட்ட அரசு மானியத் தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

**ஒரு கால பூஜைத் திட்டம்**

**84.** நிதி வசதியற்று, ஒரு கால பூஜை கூட செய்திட இயலாத திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை செய்திட உதவும் வகையில் இத்திட்டம் **1986** ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச்சிறப்புமிகு திட்டத்தில் பொதுமக்களும் பங்கேற்கும் நோக்கில், **1993** ஆம் ஆண்டு **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் திருக்கோயில் ஒன்றுக்கு பொதுமக்கள் நன்கொடையாக

ரூ.2,500/– வழங்க முன்வந்தால், நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/–ம், திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300/–ம், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/–ம், ஆக மொத்தம் ரூ.25,000/– அந்தந்த திருக்கோயில் பெயரில் முதலீடு செய்யப்பட்டு, அதில் கிடைக்கும் வட்டி வருவாயைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

85. **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் 2011 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபின் ரூ.25,000/– முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகை போதுமானதாக இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு நிரந்தர முதலீட்டுத் தொகையை ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.1 இலட்சமாக உயர்த்தினார்கள். இத்திட்டத்தின்கீழ் 11,931 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. இதற்கு ஒருமுறை வழங்கும் அரசு மானியமாக ரூ.59.48 கோடி வழங்கப்பட்டது. எஞ்சிய தொகை ரூ.30 கோடி நிதிவசதிமிக்க திருக்கோயில்கள் உபரி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர், 2014–2015 ஆம் ஆண்டில் மேலும் 68 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு 11,999 திருக்கோயில்களில் செயல்பாட்டில் உள்ளது.

**86. 2015–2016** ஆம் ஆண்டு மேலும் **505** திருக்கோயில்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி **2016–2017** ஆம் ஆண்டில் மேலும் **241** திருக்கோயில்களுக்கு, திருக்கோயிலுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வைப்பு நிதி முதலீடு செய்யப்பட்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் **12,745** திருக்கோயில்களில் ரூ.**127.45** கோடி வைப்புநிதி முதலீடு செய்யப்பட்டு ஒருகால பூஜைத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**87.** இத்திட்டத்தின் கீழ் ஒரு கால பூஜைக்கு திருக்கோயிலுக்கு ரூ.**10,000/–** நன்கொடை எவரேனும் அளித்தால், பல்வேறு நிதிகளிலிருந்து ரூ.**90,000/–** நிதி அளித்து ஆக மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் அத்திருக்கோயில் பெயரில் வைப்பு நிதி உருவாக்கி ஒரு கால பூஜை நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

## சிறு திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்கள் வழங்குதல்

**88. 10,000** சிறு திருக்கோயில்களுக்குச் சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட பித்தளைத் தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கும் விளக்கு ஆகிய பூஜை உபகரணங்கள் ரூ.**2.44** கோடி செலவில் **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு **15.09.2015** அன்று திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. **2016–2017** ஆம் ஆண்டில் மேலும் **10,000** சிறு திருக்கோயில்களுக்கு ரூ.**2.50** கோடி செலவில் பூஜை உபகரணங்கள் வழங்கும் திட்டம் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **08.05.2017** அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

## பழைமையான திருக்கோயில்களின் கால பூஜைகளுக்கு புத்துயிரூட்டல்

**89.** நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களால் பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற பழம்பெரும் திருக்கோயில்களில் கால பூஜைகள் செய்வதில் தொய்வு ஏற்பட்டதைக் களைவதற்கு இத்திட்டம்

ஏற்படுத்தப்பட்டது. நிதி வசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து முழு அளவிலான கால பூஜைகளைச் செய்திட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதன் பயனாக 19 நிதி வசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து 50 நலிவுற்ற திருக்கோயில்களுக்கு 2001–2002 முதல் 2005–2006 ஆம் ஆண்டு வரை நிதியுதவி வழங்கப்பட்டது. 2017–2018 ஆம் ஆண்டில் 89 திருக்கோயில்களுக்கு பொது நல நிதியிலிருந்து ரூ.1,19,70,000/– நிதியுதவி வழங்கப்பட்டது.

## IV - திருப்பணி

### திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்)

**90. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி, வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த திருக்கோயில்கள், ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் போற்றிப்பாடப்பட்ட திருக்கோயில்கள், பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள், கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளிலுள்ள சிறு திருக்கோயில்கள் ஆகியவற்றை

திருப்பணிகள் (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) செய்து பேணிப் பாதுகாத்திட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள்**

**91.** பின்வரும் பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன**:—**

- திருக்கோயில் மூலம் பணி மேற்கொள்ள நன்கொடை நிதி
- திருக்கோயில் நிதி
- பிற திருக்கோயில்களின் உபரி நிதி மாற்றம்
- அரசு மானியம்
- இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி
- பொது நல நிதி
- ஆலய மேம்பாட்டு நிதி
- கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி
- திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி
- பக்தர்கள் மூலம் நேரடியாக மேற்கொள்ளப்படும் உபயத் திருப்பணிகள்

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதி
- நிதி ஆணைய மானியம்
- சுற்றுலாத்துறை நிதி
- ஆசிய வளர்ச்சி வங்கி மூலமாக பெறப்படும் நிதி

**92.** நன்கொடையாளர்கள் திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கு முன்வரும் நிகழ்வுகளில், அவர்களால் வழங்கப்படும் நிதியாதாரத்தில் குறைவு ஏற்படும் சூழ்நிலை ஏற்படும்போது துறை மூலமாகவும் கூடுதல் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

**திருக்கோயில் மூலம் பணி மேற்கொள்ள நன்கொடை நிதி**

**93.** இறை நம்பிக்கை, ஆன்மீகம் மற்றும் சமய ஈடுபாடு கொண்டோர், தொழிலதிபர்கள், செல்வந்தர்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மனமுவந்து அளிக்கும் நன்கொடையைக் கொண்டும், திருப்பணிகள் (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) நடைபெறுகின்றன. கடந்த ஒன்பது ஆண்டுகளில் **589** திருக்கோயில்களில் ரூ.**37.73** கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நன்கொடை மூலம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. **2019–2020** ஆம் நிதியாண்டில் பிப்ரவரி

மாதம் வரை, **4** திருக்கோயில்களில் **4** திருப்பணிகளுக்கு ரூ.**51.64** இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்ய இசைவளிக்கப்பட்டது.

**திருக்கோயில் நிதி**

**94.** நிதி மிகுந்த திருக்கோயில்களின் திருப்பணி (பாதுகாத்தல் / மரபுமாறாமல் புதுப்பித்தல் / புத்தாக்கம்) அவற்றின் நிதியிலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஒன்பது ஆண்டுகளில் **1759** திருக்கோயில்களில் ரூ.**509.18** கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் திருக்கோயில் நிதி மூலம் செய்ய ஒப்பளிக்கப்பட்டது. இதில் **2019–2020** ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை, **269** திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூ.**73.74** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**பிற திருக்கோயில்களின் உபரி நிதிமாற்றம்**

**95.** நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதி தேவைப்படும் திருக்கோயில்களுக்குத் திருப்பணிகளை மேற்கொள்ள, இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் **36**–வது பிரிவின் கீழ் நிதிமாற்றம் மூலமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் **211** திருக்கோயில்களில் ரூ.**40.16** கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்ய

இசைவளிக்கப்பட்டது. இதில் 2019–2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை, 17 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூ.4.26 கோடி நிதிமாற்றம் மூலமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**அரசு மானியம்**

**96.** அரசு மானியமாக ஆண்டுதோறும் திருக்கோயில்களின் திருப்பணிக்கென (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) ரூ.3 கோடி வழங்கப்பட்டு வந்தது. 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் 96 திருக்கோயில்களில் புனரமைப்பு / புத்தாக்கத்திற்கென ரூ.6 கோடி வழங்கப்பட்டது. ஆண்டுதோறும் வழங்கப்படும் ரூ.3 கோடி அரசு மானியம் **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் 2013–2014 ஆம் நிதியாண்டு முதல் ரூ.6 கோடியாக உயர்த்தப்பட்டது. 2011–2012, 2012–2013, 2013–2014 மற்றும் 2015–2016 ஆகிய ஆண்டுகளில் 196 திருக்கோயில்களின் சீரமைப்புப் பணிக்கு மொத்தம் ரூ.18 கோடி நிதி வழங்கப்பட்டது. 2017–2018 ஆம் ஆண்டில் 32 திருக்கோயில்களுக்கு மொத்தம் ரூ.6 கோடி நிதி வழங்கப்பட்டது.

## இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி

**97.** தமிழ்நாடு இந்து சமய அறநிலையச்சட்டம் **1959**, பிரிவு **96**–ன்படி "இந்து சமய அறக்கட்டளைகள் நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அறநிலைய சட்டப்பிரிவு **92(1)** மற்றும் **92(2)**–ன்படி சகாயத்தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் ஆகியன திருக்கோயில்களிலிருந்து வசூலிக்கப்பட்டு, இந்து சமய அறநிலையத்துறையின் சரக உதவி ஆணையர்கள் மூலம் கருவூலத்தில் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு இந்நிதியில் வரவு வைக்கப்படுகிறது.

உதவித் தொகை மற்றும் தணிக்கைத் தொகை விகிதங்கள்

(1) உதவித் தொகை (பிரிவு 92(1) ):–

| வ. எண். | சமய நிறுவனத்தின் ஆண்டு வருவாய் | உதவித் தொகை விகிதம் (விழுக்காடு) |
|---|---|---|
| 1. | ஆண்டு வருவாய் ரூ.5,000/–க்கு மிகாமலிருந்தால் | இல்லை |
| 2. | ஆண்டு வருவாய் ரூ.5,000/–க்கு மேற்பட்டு ஆனால் ரூ.20,000/–க்கு மிகாமலிருந்தால் | 4 % |
| 3. | ஆண்டு வருவாய் ரூ.20,000/–க்கு மேற்பட்டு ஆனால் ரூ.60,000/–க்கு மிகாமலிருந்தால் | 5 % |

| | | |
|---|---|---|
| 4. | ஆண்டு வருவாய் ரூ.60,000/—க்கு மேற்பட்டு ஆனால் ரூ.2,00,000/—க்கு மிகாமலிருந்தால் | 6 % |
| 5. | ஆண்டு வருவாய் ரூ.2,00,000/—க்கு மேற்பட்டு ஆனால் ரூ.5,00,000/—க்கு மிகாமலிருந்தால் | 7 % |
| 6. | ஆண்டு வருவாய் ரூ.5,00,000/—க்கு மேற்பட்டு இருந்தால் | 12 % |

(2) தணிக்கைத் தொகை (பிரிவு 92(2) ):—

| வ. எண். | சமய நிறுவனத்தின் ஆண்டு வருவாய் | தணிக்கைத் தொகை விகிதம் (விழுக்காடு) |
|---|---|---|
| 1. | ஆண்டு வருவாய் ரூ.5,000/—க்கு மிகாமலிருந்தால் | இல்லை |
| 2. | ஆண்டு வருவாய் ரூ.5,000/—க்கு மேற்பட்டு ஆனால் ரூ.5,00,000/—க்கு மிகாமலிருந்தால் | 1.5 % |
| 3. | ஆண்டு வருவாய் ரூ.5,00,000/—க்கு மேற்பட்டு இருந்தால் | 4 % |

சட்டப்பிரிவு 96(2)—ன்படி இத்துறையின் நிர்வாகச் செலவினங்கள், ஓய்வூதியமும் சேர்த்து, மாநில கணக்காயரால் மேற்படி அறக்கட்டளைகள் நிதியில் பற்று வைக்கப்படுகின்றன.

இந்நிதியின் வரவு செலவினங்கள் இந்து சமய அறநிலையத்துறையால் ஒத்திசைவு செய்யப்பட்டு சென்னை முதன்மை மாநில கணக்காயரால் மேற்பார்வையிடப்படுகின்றன. மாநில கணக்காயரின் அறிக்கையின்படி **31.03.2019** அன்றுள்ளவாறு மேற்படி நிதியில் ரூ.**4681.06** இலட்சங்கள் இருப்பில் (உபரியாக) உள்ளது.

**பொது நல நிதி**

**98.** ‘‘பொது நல நிதி’’ என்ற நிதியம் தனி நபர்கள் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடை மற்றும் இந்து சமய அறநிறுவனங்களின் பங்களிப்பு தொகை ஆகியவற்றைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் **1284** திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) ரூ.**96.28** கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ள நிதியுதவி வழங்கப்பட்டது. **2019–2020** ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, **138** திருக்கோயில்களுக்கு ரூ.**13.96** கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

மேலும், **2019–2020** ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, பொது நல நிதியிலிருந்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.**9.65** கோடியும், கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.**5.00** கோடியும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**ஆலய மேம்பாட்டு நிதி**

**99.** நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காக ரூ.**8** கோடி பெற்று மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மூலதன நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து தொன்மை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் **63** திருக்கோயில்களுக்கு ரூ.**7.64** கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, **2** திருக்கோயில்களுக்கு ரூ.**16.80** இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**100. 2016–2017** ஆம் ஆண்டில் ஒரு கால பூஜை திட்டத்திற்கு இந்நிதியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.4,800/– வீதம் 241 திருக்கோயில்களுக்கு ரூ.11.56 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி**

**101.** இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சிறு கிராமப்புறத் திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிகளுக்கு நிதியுதவி வழங்கிட "**கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டம்**" என்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ.2 கோடி நிதிமாற்றம் செய்து மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் வழங்கப்பட்டதை 2012–2013 ஆம் ஆண்டில் **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/– என உயர்த்தப்பட்டும், 2016–2017 ஆம் ஆண்டில் **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி

திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் என உயர்த்தப்பட்டு, அதன்படி 2011–2012 முதல் 2019–2020 வரை 5919 திருக்கோயில்களுக்கு ரூ.42.83 கோடி வழங்கப்பட்டது. 2019–2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை, இத்திட்டத்தின் கீழ் 532 கிராமப்புறத் திருக்கோயில்கள் அங்கீகரிக்கப்பட்டு ரூ.5.32 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

102. ''முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி'' என்ற நிதியம் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் ஐந்தாம் நாள் உருவாக்கப்பட்டது. இந்நிதி அமைப்புக்கு தமது சொந்த பணத்திலிருந்து ரூ.1,00,008/–ஐ நன்கொடையாக **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் அளித்தார்கள். இந்நிதிக்குத் தொண்டுள்ளம் கொண்டோர், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டன. இந்நிதியமைப்பு ''திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி'' என்று தற்போது அழைக்கப்படுகிறது. 2011–2012 முதல் 2015–2016 வரை 17 திருக்கோயில்களுக்கு ரூ.1.59 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. 2016–2017ஆம் ஆண்டில் ஒரு கால பூஜை வைப்பு நிதித் திட்டத்திற்கு

இந்நிதியிலிருந்து பங்கு தொகையாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.5,200/– வீதம் 241 திருக்கோயில்களுக்கு ரூ.12.53 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி அரசால் நேரடியாக நிருவகிக்கப்பட்டு வருகிறது.

**பக்தர்கள் மூலம் நேரடியாக மேற்கொள்ளப்படும் உபயத் திருப்பணிகள்**

**103.** பக்தர்கள் தாமே முன்வந்து தமது சொந்த செலவிலும், துறை மேற்பார்வையிலும் திருக்கோயில்களுக்குத் திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) செய்வது வழக்கத்திலுள்ளது. இவர்களது உபயத் திருப்பணி, துறையின் கண்காணிப்புடன் ஊக்குவிக்கப்படுகிறது. **2011–2012** முதல் **2019–2020** ஆம் ஆண்டு வரை **1076** திருக்கோயில்களில் ரூ.**175.32** கோடி மதிப்பீட்டில் உபயத்திருப்பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. **2019–2020** ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, **252** திருக்கோயில்களில் **281** உபயத் திருப்பணிகளுக்கு ரூ.**36.68** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதி**

**104.** இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட நிதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி பெறப்பட்டு, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டது. 2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்ற இத்தொகை போதுமானதாக இல்லை என்பதையறிந்து **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் இத்தொகை ஒரு திருக்கோயிலுக்கு ரூ.50,000/– என உயர்வு செய்யப்பட்டும், 2016–2017 ஆம் ஆண்டில் **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணைப்படி திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் என உயர்த்தப்பட்டு, 2011–2012 முதல் 2019–2020 வரை 7159 திருக்கோயில்களுக்கு ரூ.53.39 கோடி விடுவிக்கப்பட்டது. 2019–2020 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 1000 திருக்கோயில்கள் அங்கீகரிக்கப்பட்டு ரூ.10 கோடி தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலாத்துறை நிதி**

**105.** தமிழகத் திருக்கோயில்கள் பெரும் சுற்றுலா ஈர்ப்புத் தலங்களாகத் திகழ்கின்றன. திருக்கோயில்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட பக்தர்களின் நலன் கருதி கழிப்பறைகள், குளியலறைகள், குடிநீர்வசதி, தங்கும் கூடங்கள், தகவல் மையங்கள், அணுகு சாலைகள், உயர்கோபுர மின்விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் புல்வெளி அமைப்புகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சுற்றுலாத்துறையும், அறநிலையத்துறையும் இணைந்து செயல்படுகின்றன. இதனடிப்படையில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் **19** திருக்கோயில்களுக்கு ரூ.**10.22** கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**106.** ஒளிரூட்டுதல் மற்றும் திருக்கோயில் திருக்குளங்களைச் சீரமைத்தல் போன்ற பணிகளுக்காக மத்திய அரசின் "பிரசாத்" (PRASAD - **Pilgrimage Rejuvenation And Spiritual Augmentation Drive)** திட்டத்தின் கீழ் ரூ.**8.87** கோடி செலவில் பின்வரும் திருக்கோயில்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:–

| வ. எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 1. | அருள்மிகு ஏகாம்பநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 2. | அருள்மிகு அஷ்டபுஜப்பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 3. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 4. | அருள்மிகு ஜுரகரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 5. | அருள்மிகு கட்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 6. | அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 7. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி(குமரகோட்டம்) திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 8. | அருள்மிகு வைகுண்டப் பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 9. | அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 10. | அருள்மிகு உலகளந்த பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம் |

**ஆசிய வளர்ச்சி வங்கி மூலமாக பெறப்படும் நிதி**

**107.** தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி மூலம் யாத்ரி நிவாஸ், சுற்றுலா தகவல் மையம், சுற்றுலா வரவேற்பு மையம் மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிப்

பணிகள் போன்றவைகளுக்காக சுற்றுலாத்துறை மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

108. 2017–2018 ஆம் ஆண்டில் 11 திருக்கோயில்களுக்கு ரூ.52.83 கோடி நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**பழைமை வாய்ந்த திருக்கோயில்களைப் பாதுகாத்தல், பழைமை மாறாது புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கத் திருப்பணி:–**

109. திருக்கோயில்களின் பழைமையினை பாதுகாப்பது குறித்து பாதுகாத்தல் முறை கையேடு (Conservation Manual) ஒன்றினை யுனெஸ்கோ நிறுவனத்துடன் கலந்து தயார் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம், தன்னிச்சை நீதிப்பேராணை மனு எண்.574/2015–ல் இத்துறைக்கு உத்தரவிட்டுள்ளது. இதன்படியான கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. பாதுகாத்தல் பணி செய்வதற்கு உகந்த வழிமுறைகள் வகுக்கும் வரையில் இன்றியமையாத பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக ஆலோசனைகள் வழங்கிட, 7

நபர்கள் கொண்ட ஒரு வல்லுநர் குழுவினை **07.11.2016** தேதிய உத்தரவின்படி உயர்நீதிமன்றம் அமைத்துள்ளது.

**110.** அதன் பின்பு மத்திய மற்றும் மாநில தொல்லியல் துறைகளிலிருந்து 22 வல்லுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருப்பணி கருத்துருக்கள் பெறப்பட்டு வருகின்றன. குழு வல்லுநர்களின் அறிவுரைப்படி, தொன்மைமிக்க திருக்கோயில்களை பாதுகாத்தல், மரபு மாறாது புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொல்லியல் வல்லுநர்களிடமிருந்து கருத்துரைகள் பெறப்பட்ட பின்னர், அரசால் அமைக்கப்பட்டுள்ள மண்டல மற்றும் மாநில அளவிலான பரிசீலனைக் குழுக்களின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது. அதன் பின்னர் முன்மொழிவுகள் உயர்நீதிமன்றக் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அக்குழுவின் அறிவுரைப்படி திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**சுவரோவியங்களை புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல்**

**111.** சட்டமன்றப் பேரவை விதி **110**—ன் கீழ், **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இந்து சமய

அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள **50** திருக்கோயில்களின் பழைமையான சுவரோவியங்களை பழைமை மாறாது புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள ஆலோசனை மற்றும் மேற்பார்வைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

**112.** இக்குழுவின் அறிவுரையின்படி கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில் இராஜகோபுர சுவரோவியங்கள் ரூ.**81** இலட்சத்தில் புனரமைக்கப்பட்டு உள்ளன. இதேபோல், திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர், அருள்மிகு நாறும்பூநாதசுவாமி திருக்கோயில் இராஜகோபுர சுவரோவியங்கள் புனரமைக்கும் பணி ரூ.**1.42** கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. இவை தவிர ரூ.**64.10** இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம், அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயிலின் வெளிப்பிரகார சுவரில் **433** சதுர மீட்டரில் வரையப்பட்டுள்ள மூலிகை ஓவியங்களை பழைமை மாறாது புதுப்பிக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது.

**113.** கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு, அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயிலில் சுற்றுசுவரில் உள்ள பழைமையான ஓவியங்களை பழைமை

மாறாமல் புதுப்பிக்கும் பணிகளுக்கு ரூ.97.20 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

**114.** முதன்முதலாக சிமெண்ட் பூச்சின் கீழ் நாயக்கர் காலத்து சுவரோவியம் சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் புனரமைப்புப் பணியின்போது மே 2015—ல் கண்டறியப்பட்டுள்ளது.

**திருக்குளங்களை சீரமைத்தல் மற்றும் மழைநீர் சேகரித்தல்**

**115.** இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டின் கீழுள்ள மொத்த திருக்கோயில்களில் 1586 திருக்கோயில்களுக்கு 2359 திருக்குளங்கள் உள்ளன. இவற்றில் 1068 திருக்குளங்கள் புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் இருந்தன. 2011—2012 முதல் 2019—2020ஆம் ஆண்டு வரை 867 திருக்குளங்கள் ரூ.5.30 கோடி செலவில் புனரமைப்பு செய்யப்பட்டன. எஞ்சிய திருக்குளங்களை சீரமைக்கும் திருப்பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. 2019—2020 ஆம் ஆண்டில் 20 திருக்குளங்கள் ரூ.73 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்பட்டன மற்றும் 30 திருக்குளங்கள் ரூ.7.24 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**116.** மழை நீர் சேகரிப்பு செயலாக்கத் திட்டத்தின் கீழ், 2014 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் 5400 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் 1004 திருக்குளங்களில் மழைநீர் சேகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

**117.** திருக்குளங்களைப் பேணிப் பாதுகாத்திட பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

- திருக்குளங்களின் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
- திருக்குளங்களைச் சுற்றி சுவர் அமைத்தல்.
- தூர் எடுத்தல் மற்றும் ஆழப்படுத்துதல்.
- திருக்குளங்களில் உள்ள படிகளைச் சீரமைத்தல்.
- திருக்குளங்களுக்கு மழை நீர் வருவதற்கும் உபரி நீர் வெளியேறுவதற்கும் வழி ஏற்படுத்துதல்.

**மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு வைகை ஆற்றிலிருந்து நீர் கொணர பழைய நீர்வரத்து வாய்க்காலைப் புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணி**

**118.** மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான, சுமார் 1 லட்சம் சதுர அடி

பரப்பளவும், **538** மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட அருள்மிகு மாரியம்மன் தெப்பக்குளத்தில் ஒவ்வொரு வருடமும் தை பூசத்தன்று அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் தெப்பத்திருவிழா நடைபெறும். சுமார் **400** ஆண்டுகளுக்கு முன்னர் மன்னர் காலத்திலிருந்து வைகை நதியில் இருந்து பனையூர் கால்வாய் மூலம் நீர்வரப்பெற்று, தெப்பக்குளத்தின் அருகில் உள்ள வண்டல் மண் தேங்கும் தொட்டிகளில் தூய்மையாக்கப்பட்டு, நீர் தெப்பக்குளத்தில் நிரம்பும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**119.** காலப்போக்கில் பனையூர் வாய்காலில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகளால் தெப்பக்குளத்திற்கு வரும் தண்ணீர் வரத்து முற்றிலும் நின்று போய்விட்டது. இடைப்பட்ட காலத்தில் தெப்பத்திருவிழாவிற்கான தண்ணீர் அருகில் உள்ள வைகை நதியில் இருந்து மின்மோட்டார் மூலம் நிரப்பப்பட்டு தெப்பத்திருவிழா நடைபெற்ற வந்தது.

திருக்கோயில் நிர்வாகத்தின் தொடர் முயற்சியால், மாவட்ட நிர்வாகம் மற்றும் பொதுப்பணித்துறையின் ஒத்துழைப்புடன் பனையூர் வாய்க்காலில் ஏற்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்புகள் அகற்றி, வாய்க்கால் தூர்வாரி செப்பனிட்டு, வைகையாற்றில் தடுப்பணை கட்டி, சுமார் **40**

ஆண்டுகளுக்கு பிறகு, பனையூர் கால்வாயின் வழியே தண்ணீர் வரச்செய்து தெப்பக்குளத்தில் சுமார் 14 அடிக்கு மேல் தண்ணீர் நிரப்பி இந்த ஆண்டின் தெப்பத் திருவிழா 08.02.2020 அன்று மிகவும் சிறப்பாக நடைப்பெற்றது. இதன் மூலம் 400 ஆண்டு வழக்கத்திற்கு புத்துயிர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**பட்டயப் பொறியாளர்களைப் பட்டியலிடுதல்**

120. திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் தயாரித்து அளிப்பதில் தாமதம் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறைகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற பொறியாளர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு கடந்த ஒன்பது ஆண்டுகளில் 13 பட்டயப் பொறியாளர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூலமாக திருக்கோயில்களைச் சீரமைப்பதற்குரிய கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான வரைபடங்கள், மதிப்பீடுகள் தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஸ்தபதிகளைப் பட்டியலிடுதல்**

**121.** சிற்ப சாஸ்திர மற்றும் ஆகம சாஸ்திர விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளபடி திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், தம் முன்னோர் மூலம் வழிவழியாக இக்கலையை நன்கு கற்றறிந்தோர், சிற்ப சாஸ்திரக்கலையில் பட்டம் அல்லது பட்டயம் பெற்றுள்ளோர் ஆகியோர் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் அவ்வப்போது ஸ்தபதிகளாகவும், சிற்பிகளாகவும் பட்டியலிடப்பட்டு வருகின்றனர். **2011–2012** முதல் **2015–2016** வரை **539** ஸ்தபதி/சிற்பிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**குடமுழுக்கு (கும்பாபிஷேகம் / சம்ப்ரோக்ஷணம்)**

**122.** பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் ஆகம விதிப்படி ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். இதனடிப்படையில் திருக்கோயில்கள் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தப்பட்டு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்படுகின்றன:-

- ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடல்பெற்ற பழைமை வாய்ந்த திருக்கோயில்கள்.

- வரலாற்றுப் புகழ்பெற்ற மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- கிராமப்புறங்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள்.

**123. 2011–2012** முதல் **2019–2020** வரை **11,448** திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளன. **2019–2020** ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை, **373** திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளன.

## தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா

**124.** தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த மாமன்னன் ராஜராஜ சோழனால் கட்டப்பட்ட உலகப் பிரசித்தி பெற்ற அற்புதத் திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் இத்துறை சட்டப்பிரிவு **46 (iii)** கீழ் அறிவிப்பு செய்யப்பட்ட அரண்மனை தேவஸ்தானத்துடன் இணைந்த முதுநிலை

திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு இந்திய தொல்லியல் துறையாலும், திருக்கோயில் நிர்வாகம் இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தின் மூலமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயில் உலக பாரம்பரிய மரபு சின்னமாக யுனஸ்கோ நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**125.** இத்திருக்கோயிலில் கடந்த **1010, 1729, 1843, 1980** மற்றும் **1997** ஆண்டுகளில் திருக்குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. தற்போது கடந்த **05.02.2020**ல் திருக்குடமுழுக்கு விழா சிறப்புற நடத்தப்பட்டுள்ளது.

**126.** இத்திருக்கோயிலில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணிகளும் ரூ.**60** இலட்சம் மதிப்பீட்டில் இரசாயனப் பூச்சால் சுத்தம் செய்திடல் பணிகளும் மத்திய தொல்லியல் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இத்திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா நடைபெறுவதற்கு திருக்கோயில் நிதி ரூ.**71** இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் **39** உபயதாரர்கள் மூலம் சுமார் ரூ.**264.50** இலட்சம் திருக்குடமுழுக்கு விழாவிற்கு செலவிடப்பட்டுள்ளது.

## சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா

**127.** சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் கடந்த 22.08.2004 திருக்குடமுழுக்கு விழா சிறப்புற நடத்தப்பட்டுள்ளது. குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில், இத்திருக்கோயில் கோபுரங்கள் மற்றும் அனைத்து சன்னதிகளுக்கும் திருப்பணி மேற்கொள்ளும் வகையில் இறையுணர்வும், கொடை உள்ளமும் கொண்ட பேரன்பர்களின் ஆதரவோடு உபயதாரர்கள் மூலம் தொல்பொருள் துறை மற்றும் அறநிலையத்துறையின் அனுமதி பெற்று, கடந்த **06.06.2019** அன்று சன்னதி விமானங்கள் மற்றும் கோபுரங்களுக்கு பாலாலயம் செய்விக்கப்பட்டு, கிழக்கு ஏழுநிலை இராஜகோபுரம், ஐந்துநிலை கிழக்கு ரிஷிகோபுரம், ஐந்து நிலை மேற்குக் கோபுரம் ஆகிய கோபுரங்களில் பராமரிப்புத் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு, வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. மேலும், அருள்மிகு விஜயகணபதி, சுப்பிரமணியர், அருள்மிகு மருந்தீசுவரர், திரிபுரசுந்தரி, தியாகராஜர், நடராஜர் முதலான சன்னதிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு,

அனைத்து சன்னதி விமானங்களுக்கும் வண்ணம் தீட்டப்பட்டு திருப்பணிகள் அனைத்தும் உபயத் திருப்பணியாக ரூ.75 லட்சம் மதிப்பில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளது. திருப்பணிகள் பூர்த்தியானதைத் தொடர்ந்து 05.02.2020 அன்று குடமுழுக்கு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

**மரத்திருத்தேர்**

**128.** இந்து சமய அறநிலையத்துறையின் கீழுள்ள திருக்கோயில்களில் 809 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 989 மர திருத்தேர்கள் உள்ளன. 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில், நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதி மூலம் திருத்தேர்கள் திருப்பணிக்காக (பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்) ரூ.10.50 கோடி நிதி ஏற்படுத்தப்பட்டது. 2011–2012 முதல் 2019–2020 முடிய 204 திருத்தேர்கள் ரூ.27.40 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன. 2019–2020 ஆம் நிதி ஆண்டில் 10 திருத்தேர்கள் ரூ.2.47 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு, 15 புதிய திருத்தேர்கள் ரூ.4.57 கோடி மதிப்பீட்டில் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**129.** பொது நல நிதியிலிருந்து திருத்தேர் திருப்பணிக்கு **2016–2017** ஆம் ஆண்டில் ரூ.**1.18** கோடியும், **2017–2018** ஆம் ஆண்டில் ரூ.**83.85** இலட்சமும், **2018–2019** ஆம் ஆண்டில் ரூ.**49.68** இலட்சமும், **2019–2020** ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, ரூ.**159.76** இலட்சமும் விடுவிக்கப்பட்டுள்ளது.

**தங்கரதம் மற்றும் வெள்ளிரதம் உள்ள திருக்கோயில்கள்**

**130.** திருக்கோயில்களில் பக்தர்கள் தங்களது வேண்டுதலை நிறைவேற்ற உற்சவமூர்த்தியை தங்கரதத்திலோ, வெள்ளிரதத்திலோ எழுந்தருளச் செய்து ரதம் இழுப்பது நீண்டகால வழக்கத்தில் உள்ளது.

தற்போது கீழ்க்காணும் **65** திருக்கோயில்களில் தங்கரதமும், **49** திருக்கோயில்களில் வெள்ளிரதமும் பயன்பாட்டில் உள்ளன:–

**தங்கரதம் உள்ள திருக்கோயில்கள்**

| வ.எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி. |
| 2. | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை. |
| 3. | அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை. |

| | |
|---|---|
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி. |
| 5. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு. |
| 6. | அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை. |
| 7. | அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில். |
| 8. | அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி, கோயம்புத்தூர். |
| 9. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம். |
| 10. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. |
| 11. | அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோவில். |
| 12. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். |
| 13. | அருள்மிகு வானமாமலைப் பெருமாள் திருக்கோயில், நாங்குநேரி (சப்பரம்). |
| 14. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 15. | அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி. |
| 16. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை. |
| 17. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர். |
| 18. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு. |

| | |
|---|---|
| 19. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம். |
| 20. | அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர். |
| 21. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை. |
| 22. | அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி. |
| 23. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை. |
| 24. | அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை. |
| 25. | அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு. |
| 26. | அருள்மிகு அனந்தபத்மநாபசுவாமி திருக்கோயில், அடையாறு, சென்னை. |
| 27. | அருள்மிகு கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில், திருத்தங்கல், சிவகாசி. |
| 28. | அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை. |
| 29. | அருள்மிகு வேங்கடாஜலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், கும்பகோணம். |
| 30. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம். |
| 31. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரூர். |
| 32. | அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர். |
| 33. | அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், ஓசூர். |

| | |
|---|---|
| 34. | அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல். |
| 35. | அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், நாமக்கல். |
| 36. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பச்சைமலை, கோபிசெட்டிபாளையம். |
| 37. | அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி. |
| 38. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில், திருநெல்வேலி. |
| 39. | அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை, சிவகங்கை. |
| 40. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல். |
| 41. | அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சிராப்பள்ளி. |
| 42. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம். |
| 43. | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம். |
| 44. | அருள்மிகு முருகன் திருக்கோயில், சோலைமலை மண்டபம், அழகர்கோயில், மதுரை. |
| 45. | அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர், வேலூர். |
| 46. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை. |
| 47. | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல். |

| | |
|---|---|
| 48. | அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர், விழுப்புரம். |
| 49. | அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், ஈரோடு. |
| 50. | அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர், காஞ்சிபுரம். |
| 51. | அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர். |
| 52. | அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழி, திருநெல்வேலி. |
| 53. | அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 54. | அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை. |
| 55. | அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில், பேளூர், சேலம். |
| 56. | அருள்மிகு பாலதண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், சுக்கிரவாரபேட்டை, கோயம்புத்தூர். |
| 57. | அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயில், சிவகாசி, விருதுநகர். |
| 58. | அருள்மிகு ஆமருவிப்பெருமாள் திருக்கோயில், தேரழந்தூர், நாகப்பட்டினம். |
| 59. | அருள்மிகு பூங்கா முருகன் திருக்கோயில், தல்லாக்குளம், மதுரை. |
| 60. | அருள்மிகு வாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், விருதுநகர். |

| | |
|---|---|
| 61. | அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி (கேடகம் / சப்பரம்). |
| 62. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், திருவப்பூர், புதுக்கோட்டை. |
| 63. | அருள்மிகு சௌந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், நாகப்பட்டினம். |
| 64. | அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, கன்னியாகுமரி. |
| 65. | அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், கல்வடங்கம், சங்ககிரி வட்டம், சேலம். |

## வெள்ளிரதம் உள்ள திருக்கோயில்கள்

| வ.எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி. |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். |
| 3. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. |
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி. |
| 5. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம். |
| 6. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை. |

| | |
|---|---|
| 7. | அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை. |
| 8. | அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம். |
| 9. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர். |
| 10. | அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில். |
| 11. | அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில், சீர்காழி. |
| 12. | அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை. |
| 13. | அருள்மிகு மாரியம்மன், அங்காளம்மன் திருக்கோயில், பொள்ளாச்சி. |
| 14. | அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில், உடுமலைப்பேட்டை. |
| 15. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு. |
| 16. | அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர். |
| 17. | அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 18. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 19. | அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை. |
| 20. | அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக்கோயில், அரியக்குடி. |

| | |
|---|---|
| 21. | அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி. |
| 22. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கீழச்செவல்பட்டி. |
| 23. | அருள்மிகு கண்ணுடையநாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை. |
| 24. | அருள்மிகு கொப்புடையநாயகியம்மன் திருக்கோயில், காரைக்குடி. |
| 25. | அருள்மிகு நகரசிவன் என்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், தேவகோட்டை. |
| 26. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர், திருமயம். |
| 27. | அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு. |
| 28. | அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி. |
| 29. | அருள்மிகு பழநியாண்டவர் திருக்கோயில், பவானி. |
| 30. | அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ஆய்க்குடி, திருநெல்வேலி. |
| 31. | அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், தொட்டியம், திருச்சிராப்பள்ளி. |
| 32. | அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நெய்வேலி. |
| 33. | அருள்மிகு வெயிலுக்கு உகந்த விநாயகர் திருக்கோயில், உப்பூர், இராமநாதபுரம். |
| 34. | அருள்மிகு சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல். |
| 35. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமரக்கோட்டம், காஞ்சிபுரம். |

| | |
|---|---|
| 36. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம். |
| 37. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம், பெரம்பலூர். |
| 38. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை. |
| 39. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், தங்கசாலை, சென்னை. |
| 40. | அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 41. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், விராலிமலை, புதுக்கோட்டை. |
| 42. | அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவத்திபுரம், திருவண்ணாமலை. |
| 43. | அருள்மிகு சேவுகப் பெருமாள் திருக்கோயில், சிங்கம்புணரி, சிவகங்கை. |
| 44. | அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயில், பாலாற்றங்கரை, வேலூர். |
| 45. | அருள்மிகு நவநீதேஸ்வரசுவாமி திருக்கோயில், சிக்கல், நாகப்பட்டினம். |
| 46. | அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயில், சென்னை. |
| 47. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சைதாப்பேட்டை, சென்னை. |
| 48. | அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம், புதுக்கோட்டை. |

| | |
|---|---|
| **49.** | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், கோயில்கந்தன்குடி, திருவாரூர். |

## V - பக்தர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள்

### அடிப்படை வசதிகள்

### குடிநீர் வசதி

**131.** திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு போதுமான அளவு பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு 4.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தெக்களூர் கிராமத்திலிருந்து ரூ.1.78 கோடி செலவில் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டம், பண்ணாரி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலுக்கு 9.5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானிசாகர் அருகிலுள்ள கொத்தமங்கலம் கிராமத்திலிருந்து ரூ.2.09 கோடி செலவில் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**132.** திண்டுக்கல் மாவட்டம், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் மற்றும் மதுரை

மாவட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு குடிநீர் வசதி மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**133.** திண்டுக்கல் மாவட்டம், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் குடிநீர் திட்டத்தை செயல்படுத்துவதற்காக பாலாற்றில் தடுப்பணை கட்டியும், உள் எடுப்பு கிணறு அமைத்தும் **2.31** MLD (million litres per day) தண்ணீரை எடுத்து இத்திருக்கோயிலுக்கு பயன்படுத்தும் திட்டம் ரூ.**22.72** கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வைப்பு பணியாக நடைபெற்று வருகிறது.

**134.** மதுரை மாவட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் குடிநீர் திட்டத்தை செயல்படுத்துவதற்காக கள்ளந்திரி கிராமத்தில் ரூ.**3.31** கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வைப்பு பணியாக நடைபெற்று வருகிறது.

**நவீன கழிப்பிட வசதிகள்**

**135.** திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நவீன கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. **2011–2012** முதல் **2019–2020** வரை, **163** திருக்கோயில்களில் ரூ.**28.16** கோடி மதிப்பீட்டில் நவீன கழிப்பிட வசதிகள் ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, **15** திருக்கோயில்களில் ரூ.**2.94** கோடி மதிப்பீட்டில் நவீன கழிப்பிட வசதிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**தங்கும் வசதிகள்**

**136.** திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக முக்கிய திருக்கோயில்களில் குடில்கள், தங்கும் அறைகள், துயில் கூடங்கள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. **2011–2012** ஆம் ஆண்டு முதல் **2019–2020** ஆம் ஆண்டு வரை **33** திருக்கோயில்களில் ரூ.**65.89** கோடி மதிப்பீட்டில் தங்கும் கூடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, **7** திருக்கோயில்களில் ரூ.**2.13** கோடி

மதிப்பீட்டில் தங்கும் கூடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**137.** இது தவிர, ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் நிதி பங்களிப்புடன் ரூ.47.09 கோடி மதிப்பீட்டில் ஒரே நேரத்தில் சுமார் 1000 பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக குடில்கள், அறைகள், துயில் கூடங்கள், உணவகம் போன்ற வசதிகளுடன் கூடிய "யாத்ரி நிவாஸ்" ஸ்ரீரங்கத்தில் கட்டப்பட்டு **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் **30.06.2014** அன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.28 கோடி மதிப்பீட்டில் வைப்புப்பணியாக பொதுப்பணித்துறை மூலம் "யாத்ரி நிவாஸ்" கட்டப்பட்டு வருகிறது. இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் 500 பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக ரூ.30.92 கோடி திருத்திய மதிப்பீட்டில் "யாத்ரி நிவாஸ்" வைப்புப் பணியாக பொதுப்பணித்துறை மூலம் கட்டப்பட்டு வருகிறது. ஆலங்குடி, அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகளின்

வசதிக்கென 2 ஓய்வுக் கூடங்கள், 2 குடில்கள், அலுவலகம், தகவல் மையம், உணவருந்தும் கூடம் ஆகியன ரூ.6.71 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகளின் வசதிக்கென "யாத்ரி நிவாஸ்" ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கட்டப்பட்டு வருகின்றன.

**138.** திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில், பக்தர்கள் வசதிக்காக 476 பக்தர்கள் தங்கும் வகையில் ரூ.29.16 கோடி மதிப்பீட்டில் "யாத்ரி நிவாஸ்" கட்டும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**அன்னதானக் கூடம்**

**139.** அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்களில் சேவார்த்திகளின் பயன்பாட்டிற்கென புதிய அன்னதானக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2011–2012 முதல் 2019–2020 வரை 101 திருக்கோயில்களில் 101 அன்னதானக் கூடங்கள் ரூ.33.77 கோடி மதிப்பீட்டில் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, 13 திருக்கோயில்களில் 13

அன்னதானக் கூடங்கள் ரூ.7.38 கோடி மதிப்பீட்டில் கட்ட அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**திருக்கோயில் வழிகாட்டி / தகவல் பலகைகள்**

**140.** திருக்கோயில்களை எளிதில் சென்றடைவதற்கு ஏதுவாக முக்கிய சாலைகளில் திருக்கோயில் பெயருடன் கூடிய வழிகாட்டி பலகைகளும், அந்தந்த பகுதியில் அமைந்துள்ள அனைத்து திருக்கோயில்கள் குறித்த தகவல்களை அறிந்து கொள்ள ஏதுவாக தொடர்வண்டி மற்றும் பேருந்து நிலையங்களில் தகவல் பலகைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**பக்தர்களுக்கு உயர்தர திருநீறு மற்றும் குங்குமம் வழங்குதல்**

**141.** பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் அபிஷேக விபூதி தயாரிக்கப்பட்டு வருகிறது. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், பண்ணாரி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில்

பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ரூ.1 கோடி மதிப்பீட்டில் நவீன இயந்திரங்கள் மூலம் தரமான குங்குமம் தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது.

**மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதப் பயணம்**

**142.** தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது மானசரோவர் மற்றும் முக்திநாத் திருத்தலங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. இதன் அவசியத்தை கருத்தில் கொண்ட **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், சீனாவில் உள்ள மானசரோவர் புனித யாத்திரை பயணம் முடித்து வருவோருக்கு வாழ்நாளில் ஒருமுறை, ஒரு யாத்ரீகருக்கு ரூ.40,000/– வீதம் நிதியுதவியும், அது போன்று நேபாளத்திலுள்ள முக்திநாத் புனித யாத்திரை பயணம் முடித்து வருவோருக்கு வாழ்நாளில் ஒரு முறை, ஒரு யாத்ரீகருக்கு ரூ.10,000/– வீதம் நிதியுதவியும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் வசிக்கும் தலா 250 இந்து யாத்ரீகர்களுக்கு வழங்க ஆணையிட்டார்கள்.

## மானசரோவர் மற்றும் முக்திநாத் யாத்திரை பயனாளிகளின் ஆண்டுவாரியான பட்டியல்

| ஆண்டு | மானசரோவர் | | முக்திநாத் | | | |
|---|---|---|---|---|---|---|
| | பயனாளிகள் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) | பயனாளிகள் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) | பயனாளிகள் எண்ணிக்கை கூடுதல் (2 + 4) | செலவிடப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) கூடுதல் (3 + 5) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 2012–2013 | 146 | 58.40 | 10 | 1.00 | 156 | 59.40 |
| 2013–2014 | 209 | 83.60 | 11 | 1.10 | 220 | 84.70 |
| 2014–2015 | 240 | 96.00 | 163 | 16.30 | 403 | 112.30 |
| 2015–2016 | 51 | 20.40 | 72 | 7.20 | 123 | 27.60 |
| 2016–2017 | 249 | 99.60 | 136 | 13.60 | 385 | 113.20 |
| 2017–2018 | 326 | 130.40 | 178 | 17.80 | 504 | 148.20 |

**143. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் ஆணைப்படி **2017–2018** முதல் மேற்படி யாத்திரைகள் மேற்கொள்ளும் பயனாளிகளின் எண்ணிக்கை தலா **250**லிருந்து **500** ஆகவும், மொத்த நிதியுதவி ரூ.**1.25** கோடியிலிருந்து ரூ.**2.50** கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**144. 2018–2019** ஆம் ஆண்டில் மானசரோவர் பயணம் முடித்து வந்த **367** யாத்ரீகர்களுக்கு ரூ.**1.47** கோடி மற்றும்

முக்திநாத் பயணம் முடித்து வந்த **264** யாத்ரீகர்களுக்கு ரூ.**26.40** இலட்சம் ஆக மொத்தம் ரூ.**1.73** கோடி விரைவில் வழங்கப்படவுள்ளது.

**புடவை மற்றும் வேட்டிகள் வழங்குதல்**

**145.** முதியோர், ஆதரவற்றோர் மற்றும் விதவைத் தாய்மார்களுக்கு, சுதந்திர தினத்தன்றும், பேரறிஞர் அண்ணா நினைவு நாளன்றும் முக்கியத் திருக்கோயில்களில் காணிக்கையாகப் பெறப்படும் பருத்திநூல் புடவை மற்றும் வேட்டிகள் வழங்கப்படுகின்றன. **2011–2012** முதல் **2018–2019** ஆம் ஆண்டு வரை **1,78,786** நபர்கள் பயனடைந்துள்ளனர். **2019–2020** ஆம் ஆண்டில் **45,732** நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**பக்தர்களுக்கு இலவச லட்டு பிரசாதம் வழங்கும் திட்டம்**

**146.** மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மிக பிரபலமான இந்து வழிபாட்டு தலங்களில் ஒன்றாகும். தமிழகத்தில் சைவ சமயத்தின் மிக பெரிய வழிபாட்டு தலமாகவும், உலகம் முழுவதிலும் இருந்து பயணிகள் வருகின்ற சுற்றுலா தலமாகவும் இருந்து

வருவதாலும், இத்திருக்கோயிலுக்கு நாள்தோறும் உள்ளூரில் இருந்தும், வெளி மாவட்டம், வெளி மாநிலங்களில் இருந்தும் சேவார்த்திகளாகவும், வெளிநாட்டில் இருந்து சுற்றுலா பயணிகளாகவும், வருகை புரிகின்றனர்.

**147.** திருக்கோயில் மூலம் நேரடி தயாரிப்பில் லட்டு, அப்பம், தேன்குழல், வடை புட்டமுது, புளியோதரை மற்றும் சர்க்கரை பொங்கல் தயார் செய்யப்பட்டு பக்தர்களுக்கு ரூ.10/– என்ற சலுகை விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**148.** இத்திருக்கோயிலுக்கு நாள் ஒன்றுக்கு 13000 லிருந்து 15,000 பக்தர்கள் அம்மன் / சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு ஒரு லட்டு 30 கிராம் எடையில் நாள் முழுவதும் ஆண்டு முழுவதும் இலவச லட்டு வழங்கும் திட்டம் 08.11.2019 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் துவக்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கிய 08.11.2019 முதல் பிப்ரவரி 2020 முடிய 22,16,640 பக்தர்கள்

இலவச லட்டு பிரசாதம் பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கான உத்தேச ஆண்டு செலவினம் ரூ.202.68 இலட்சம் ஆகும்.

## VI – திருக்கோயில்கள் தூய்மையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

**உழவாரப் பணி**

**149.** பாரம்பரியமிக்க வரலாற்றுச் சின்னங்களாக விளங்கும் தமிழகத்தின் தொன்மைமிகு திருக்கோயில்கள், வானளாவிய கோபுரங்களையும், அழகிய விமானங்களையும், மண்டபங்களையும், பெரிய மதிற்சுவர்களையும் உள்ளடக்கி உள்ளன. இவற்றைப் பேணிப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும். இக்கட்டுமானங்களில் முளைத்துள்ள செடி, கொடி மற்றும் மரங்கள் கட்டுமானங்களுக்கு பெரும் சேதம் விளைவிக்கின்றன.

**150.** சமயக் குரவர்களில் ஒருவரான அப்பரடிகள் தொடங்கிச் செய்த உழவாரப் பணிக்கு புத்துயிர் அளித்திடும் வகையில் **2011–2012** ஆம் ஆண்டில் உழவாரப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு கடந்த ஒன்பது ஆண்டுகளில் **3,948** திருக்கோயில்களில் உழவாரப் பணிகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**வெளிமுகமை மூலம் தூய்மை பராமரிப்பு**

**151.** திருக்கோயில்களைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் கருதி வெளிமுகமை மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளிமுகமை மூலமாக **110** பெரிய திருக்கோயில்கள் சிறந்த முறையில் தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் இதர திருக்கோயில்களிலும் இந்த முறையை விரிவுபடுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திருக்கோயில் வளாகத்தில் நெகிழி (Plastic) பயன்பாட்டினை தடை செய்தல்**

**152.** திருக்கோயில்களில் ஆரோக்கியமும் தூய்மையும் மிக்க சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் நெகிழி பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளது. திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள அங்காடிகளில் அபிஷேக அர்ச்சனைப் பொருள்கள் மற்றும் பிரசாதப் பொருள்கள்

ஆகியவை துணிப்பைகள், காகிதப்பைகள், மூங்கில் தட்டுகள், பாக்குமட்டை தட்டுகளில் வழங்கப்படுகின்றன.

**மாற்று மின் திட்டம்**

**153.** திருக்கோயில்களில் மின் செலவைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், சூரிய சக்தி மூலம் மாற்று மின்திட்டம் **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் 2012–2013 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், சுசீந்திரம், அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்டுள்ளன. சூரியஒளி உபகரணங்கள் நிறுவிய பின்னர் மின்கட்டணப் பட்டியலில் ரூ.10,000/– லிருந்து ரூ.15,000/– வரை சேமிப்பு ஏற்படுகிறது.

## VII - பாதுகாப்பு நடவடிக்கைகள்

**திருக்கோயில்கள் பாதுகாப்பு**

**154.** திருக்கோயில் வளாகங்களில் மின்னணு பாதுகாப்பு உபகரணங்களான கள்வர் எச்சரிக்கை மணி,

மெட்டல் டிடெக்டர், நவீன ஒளிப்பதிவு (டிஜிட்டல் வீடியோ ரெக்கார்டர்), CCTV கேமராக்கள் மற்றும் உறுதியான இரும்பு கதவுகள் போன்றவை பொருத்தப்பட்டுள்ளன. வெளிமுகமை மூலம் பெரும்பாலான திருக்கோயில்களில் பகல் மற்றும் இரவுக் காவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் பாதுகாப்பு**

**155.** திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள் மற்றும் விலையுயர்ந்தவைகளை பாதுகாத்திட உலோக திருமேனி பாதுகாப்பு மையங்கள், பாதுகாப்பு அறைகள், களவு எச்சரிக்கை மணி பொருத்துதல், தொட்டிப் பூட்டு அமைப்பு ஏற்படுத்துதல், இரும்பு வாயிற்கதவுகள் பொருத்துதல், கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் ஆகியன பொருத்துதல், பகல் மற்றும் இரவுக்காவலர்கள் நியமனம், திருக்கோயில் பாதுகாப்புப் படையினர் நியமனம் ஆகியன செய்யப்பட்டுள்ளன. மேலும், சிலைகள் / உலோக திருமேனிகள் பதிவு செய்வதற்கு ஏதுவாக ஆவணப்படுத்தும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்துறையால் **31,273** திருக்கோயில்களிலுள்ள **3,37,151** சிலைகள் / உலோக திருமேனிகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

**பாதுகாப்பு அறைகள்**

**156.** **11,512** திருக்கோயில்களில் உலோகச் சிலை பாதுகாப்பு அறைகள் உள்ளன. பாதுகாப்பு அறைகள் தேவைப்படும் திருக்கோயில்கள் விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பு அறைகளில் CCTV, கள்வர் எச்சரிக்கை மணி, இரும்பு கிரில் கதவுகள், தொட்டி பூட்டு முறை மற்றும் பாதுகாப்பு காவலர்கள் ஆகிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**157.** இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள திருக்கோயில்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பிற்காக களவு எச்சரிக்கை மணி மற்றும் கண்காணிப்பு கேமராவுடன் கூடிய உயர் பாதுகாப்பு அறைகள் கட்டும் பணிக்கு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதியிலிருந்து **ரூ.308.70** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், பந்தநல்லூர் அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் **ரூ.28** இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்பு அறை கட்டப்பட்டுள்ளது. அதே போன்று **103** திருக்கோயில்களில் பாதுகாப்பு அறை கட்ட மதிப்பீடு

தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. வரும் காலங்களில் தேவையின் அடிப்படையில் திருக்கோயில்களில் பாதுகாப்பு அறை கட்டப்படும்.

**களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம்**

**158.** களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டத்தின் கீழ் ரூ.5 கோடி மைய நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மைய நிதியிலிருந்து கிடைக்கும் வட்டி வருவாயிலிருந்து களவு எச்சரிக்கை மணி பொருத்துவதற்கு நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் 75 விழுக்காடு இந்து சமய அறநிலையத்துறையின் மூலமும், எஞ்சிய 25 விழுக்காடு நன்கொடையாளர் பங்களிப்பு அல்லது திருக்கோயில் நிதி மூலமும் நிதியுதவி செய்திட இத்திட்டத்தின் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான திருக்கோயில்கள் கிராமப்புறங்களில் உள்ள நிதிவசதியற்ற திருக்கோயில்கள் என்பதையும், இத்திருக்கோயில்களில் விலை மதிப்பற்ற உலோக விக்கிரகங்கள், நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் உள்ளதாலும் அவற்றைப் பாதுகாப்பது தலையாய கடமை என்பதையும் உணர்ந்து நிதிவசதியற்ற திருக்கோயில்களில் களவு எச்சரிக்கை மணி பொருத்திட ஆகும் செலவினத்

தொகை முழுவதையும் மேற்கண்ட மைய நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. 2011–2012 முதல் 2018–2019 ஆம் ஆண்டு வரை மொத்தம் 849 திருக்கோயில்களுக்கு ரூ.101.81 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 2019–2020–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை, 19 திருக்கோயில்களுக்கு ரூ.2,32,750/– நிதியுதவி வழங்கப்பட்டது.

**உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள்**

**159.** திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலை மதிப்பற்ற உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும் பொருட்டு உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன. பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் இப்பாதுகாப்பு மையங்களில் வைத்து பாதுகாக்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் அவற்றை எடுத்துச் சென்று விழா முடிந்ததும் மீண்டும் இம்மையத்தில் ஒப்படைப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு மையத்தில் உள்ள அனைத்து உலோகத் திருமேனிகளுக்கும் பூஜைகள் செய்யப்படுகின்றன.

**160.** பாதுகாப்பு அறைகள் கட்டுவதற்கு போதிய வருவாய் இல்லாத திருக்கோயில்களுக்கு சொந்தமான விலைமதிப்பற்ற உலோகத் திருமேனிகளைப் பாதுகாப்பாக வைத்திட உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் கீழ்க்காணும் 19 மையங்களில் 8370 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த பாதுகாப்பு மையங்களில் CCTV, கள்வர் எச்சரிக்கை மணி மற்றும் ஆயுதம் தாங்கிய காவலர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. | திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்). |
| 2. | அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி. |
| 3. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி. |
| 4. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம். |
| 5. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காந்திநகர், வேலூர். |
| 6. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை. |
| 7. | அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 8. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர், கடலூர். |

| | |
|---|---|
| 9. | அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம். |
| 10. | அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர். |
| 11. | அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம், புதுக்கோட்டை. |
| 12. | அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை. |
| 13. | அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், சிவகங்கை. |
| 14. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் (கூடுதல் மையம்). |
| 15. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர். |
| 16. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி. |
| 17. | அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அதியமான் கோட்டை, தருமபுரி. |
| 18. | அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், விழுப்புரம். |
| 19. | அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர். |

**161.** மேலும், கீழ்க்கண்ட **15** மையங்களில், உலோகத் திருமேனிகளை பாதுகாக்கும் பொருட்டு **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது ஆணையின்படி உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மைய கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு இந்த உலோகத் திருமேனி மையங்களில் **335** சிலைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மலைக்காவலர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல். |
| 2. | அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர். |
| 3. | அருள்மிகு மதனகோபாலசுவாமி மற்றும் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், பெரம்பலூர். |
| 4. | அருள்மிகு நாகராஜா திருக்கோயில், நாகர்கோவில், கன்னியாகுமரி. |
| 5. | இணை ஆணையர் அலுவலக வளாகம், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர். |
| 6. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, திருப்பூர். |
| 7. | அருள்மிகு சோழீஸ்வரர் பிரசன்ன வெங்கடரமணசுவாமி திருக்கோயில், பெருந்துறை, ஈரோடு. |

| | |
|---|---|
| 8. | அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி, தேனி. |
| 9. | அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், தான்தோன்றிமலை, கரூர். |
| 10. | அருள்மிகு ஆலந்துறையார் (ம) கோதண்டராமசுவாமி திருக்கோயில், அரியலூர். |
| 11. | அருள்மிகு காயாரோகணசுவாமி உடனுறை நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம். |
| 12. | அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல். |
| 13. | திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், கிருஷ்ணாபுரம், பாளையங்கோட்டை. |
| 14. | அருள்மிகு பரிமளரெங்கநாதர் திருக்கோயில், திருஇந்தளூர், மயிலாடுதுறை |
| 15. | அருள்மிகு கபர்தீஸ்வரர் திருக்கோயில், திருவலஞ்சுழி, கும்பகோணம் |

**திருக்கோயில் பாதுகாப்புப் படை**

**162.** திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள், உண்டியல்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக ‘‘திருக்கோயில் பாதுகாப்புப்படை’’ என்ற ஒரு தனிப்பிரிவு

ஏற்படுத்தப்பட்டது. இதில் **1000** இரண்டாம் நிலைக் காவலர்கள், **3000** முன்னாள் இராணுவத்தினர் ஆகியோரை நியமனம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்தது. திருக்கோயில் பாதுகாப்புப் படையில் உள்ள முன்னாள் இராணுவத்தினருக்கு அளிக்கப்பட்டுவந்த மாத தொகுப்பூதியம் **09.01.2012** முதல் **ரூ.1,500/–**லிருந்து **ரூ.5,000/–** ஆக அரசு உயர்த்தியுள்ளது.

## திருக்கோயில்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

**163.** மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் தலைமையில் **12.02.2018** அன்று நடைபெற்ற கூட்டத்தில் திருக்கோயில்களில் தீ விபத்து தடுப்பு மற்றும் இதர பேரிடர்களைத் தவிர்க்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன. அவ்வுறிவுரைகளின்படி முதற்கட்டமாக **47** முதுநிலைத் திருக்கோயில்களில் தீ தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன்படி கீழ்க்காணும் நடவடிக்கைகள் திருக்கோயில்களில் காலமுறைப்படி தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

- தீ தடுப்பு தணிக்கை மற்றும் தீ தடுப்பு ஒத்திகை.
- தேவையான எண்ணிக்கைகளில் தீயணைப்பு கருவிகள், மணல்/தண்ணீர் வாளிகள், மின்தடை கருவிகள் போன்ற தீ தடுப்பு சாதனங்கள் நிறுவுதல்.
- தல விருட்சங்கள் மற்றும் திருக்கோயில் திருத்தேர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள்.
- திருக்கோயில் பணியாளர்களுக்கு பயிற்சி.
- தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து மின் தகுதிக்கான சான்று.
- அகல் விளக்குகள் ஏற்றுவதை தவிர்த்து அணையா விளக்கு நிறுவுதல்.

164. **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் அறிவுரைகளின்படி, சேவார்த்திகளின் பாதுகாப்பிற்குத் தேவையான முன்னேற்பாடுகள் மேற்கொள்வதற்கும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களை காலமுறைப்படி ஆய்வு செய்வதற்கும், அனைத்து கட்டடங்களின் பராமரிப்புக்கான அட்டவணையை முறையாகப் பேணி பின்பற்ற இத்துறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேலும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களின் உறுதித் தன்மை மற்றும் திருக்கோயில்களில் உள்ள மின்

உபயோக உபகரணங்களின் தரம் ஆகியவற்றை சரிபார்த்து அதற்கான சான்றுகளை பெற்று வைத்திட இத்துறையின் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## VIII – கல்வி மற்றும் அறப்பணிகள்

### கல்வி நிறுவனங்கள்

**165.** இறைப்பணியோடு ஆன்மீக நெறிகளையும், பண்பாடு மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு சமயம் மற்றும் பொதுக்கல்வி பயிற்றுவிக்க பின்வரும் பள்ளிகளையும், கல்லூரிகளையும், பாடசாலைகளையும் திருக்கோயில் நிருவாகங்கள் பேணி வருகின்றன:-

| வ. எண். | கல்வி நிறுவனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 5 |
| 2. | பல்தொழில்நுட்பக் கல்லூரி | 1 |
| 3. | மேல்நிலைப் பள்ளிகள் | 15 |
| 4. | உயர்நிலைப் பள்ளிகள் | 8 |
| 5. | நடுநிலைப் பள்ளிகள் | 2 |
| 6. | தொடக்கப் பள்ளிகள் | 9 |

| | | |
|---|---|---|
| 7. | மெட்ரிகுலேஷன் பள்ளி | 1 |
| 8. | சி.பி.எஸ்.இ. பள்ளி | 1 |
| 9. | நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சி பள்ளிகள் | 2 |
| 10. | வேத ஆகமப் பாடசாலைகள் | 5 |
| 11. | ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் | 2 |
| 12. | தேவாரப் பயிற்சிப் பள்ளிகள் | 2 |
| 13. | காது கேளாதோர் – பேச இயலாதோர் பள்ளி | 1 |
| | **கூடுதல்** | **54** |

**கல்வி நிறுவனங்கள் விவரப் பட்டியல்**

**கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநி, திண்டுக்கல். |
| 2. | அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழநி, திண்டுக்கல். |
| 3. | ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி. |
| 4. | ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி. |
| 5. | பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம். |

## பல்தொழில்நுட்பக் கல்லூரி

| |
|---|
| அருள்மிகு பழநியாண்டவர் பல்தொழில்நுட்பக் கல்லூரி, பழநி, திண்டுக்கல். |

## மேல்நிலைப் பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு பெரியநாயகியம்மன் மகளிர் மேல்நிலைப்பள்ளி, கோவிலூர், முத்துப்பேட்டை, திருவாரூர். |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மேல்நிலைப்பள்ளி, மருதமலை, வடவள்ளி, கோயம்புத்தூர். |
| 3. | அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் மேல்நிலைப்பள்ளி, அய்யம்பாளையம், சாமளாபுரம், சோமனூர், திருப்பூர். |
| 4. | அருள்மிகு பேரூர் சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப்பள்ளி, பேரூர், கோயம்புத்தூர். |
| 5. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை. |
| 6. | அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம், மதுரை. |
| 7. | அருள்மிகு திருமலை குமாரசுவாமி தேவஸ்தான பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி. |
| 8. | தேவஸ்தான மேல்நிலைப்பள்ளி, மண்டைக்காடு, கன்னியாகுமரி. |

| | |
|---|---|
| 9. | ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி, திருநெல்வேலி. |
| 10. | டி.வேணுகோபால் செட்டி மேல்நிலைப்பள்ளி, சென்னை. |
| 11. | இந்து மேல்நிலைப்பள்ளி, சென்னை. |
| 12. | அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்தினி அம்பாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராமேஸ்வரம், இராமநாதபுரம். |
| 13. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் மேல்நிலைப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம். |
| 14. | ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மேல்நிலைப்பள்ளி, மயிலம், திண்டிவனம், விழுப்புரம். |
| 15. | அருள்மிகு பராசக்தி வித்யாலயா மேல்நிலைப்பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி. |

**உயர்நிலைப் பள்ளிகள்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப்பள்ளி, கீழ்வேளூர், திருவாரூர். |
| 2. | அருள்மிகு கலியுகவரதராஜப்பெருமாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கல்லங்குறிச்சி, அரியலூர். |
| 3. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம். |
| 4. | அருள்மிகு சுந்தரராஜா உயர்நிலைப்பள்ளி, அழகர்கோயில், மதுரை. |
| 5. | தேவஸ்வம் உயர்நிலைப்பள்ளி, திற்பரப்பு, கன்னியாகுமரி. |

| | |
|---|---|
| 6. | ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம். |
| 7. | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான உயர்நிலைப்பள்ளி, சென்னை. |
| 8. | தேவஸ்வம் உயர்நிலைப்பள்ளி, குழித்துறை, கன்னியாகுமரி. |

**நடுநிலைப் பள்ளிகள்**

| | |
|---|---|
| 1. | திருவாவடுதுறை ஆதீனம் நடுநிலைப்பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம். |
| 2. | திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர் நடுநிலைப்பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம். |

**தொடக்கப் பள்ளிகள்**

| | |
|---|---|
| 1. | சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் தொடக்கப்பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. |
| 2. | சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் தொடக்கப்பள்ளி, சங்கரன்கோவில், திருநெல்வேலி. |
| 3. | ஸ்ரீ மெய்கண்டார் தொடக்கப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம். |
| 4. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் உதவி பெறும் தொடக்கப்பள்ளி, பழநி, திண்டுக்கல். |
| 5. | திருவாவடுதுறை ஆதீனம் தொடக்கப்பள்ளி, திருவிடைமருதூர், தஞ்சாவூர். |
| 6. | திருஞான சம்பந்தர் தொடக்கப்பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம். |
| 7. | அருள்மிகு சுந்தரராஜா தொடக்கப்பள்ளி, |

| | |
|---|---|
| | அழகர்கோயில், மதுரை. |
| 8. | அஞ்சுகம் தொடக்கப்பள்ளி, கோடம்பாக்கம், சென்னை. |
| 9. | பத்மாவதி கண்ணபிரான் தொடக்கப்பள்ளி, ஓட்டேரி, சென்னை. |

## மெட்ரிகுலேஷன் பள்ளி

| |
|---|
| பழநி ஆண்டவர் மெட்ரிகுலேஷன் பள்ளி, பழநி, திண்டுக்கல். |

## சி.பி.எஸ்.இ. பள்ளி

| |
|---|
| பராசக்தி வித்யாலயா, குற்றாலம், திருநெல்வேலி |

## நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப்பயிற்சிப் பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல். |
| 2. | அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர். |

## வேத ஆகமப் பாடசாலைகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல். |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி. |

| | |
|---|---|
| 3. | அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை. |
| 4. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை. |
| 5. | அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி. |

**ஓதுவார் பயிற்சிப்பள்ளிகள்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. |
| 2. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை. |

**தேவாரப் பயிற்சிப் பள்ளிகள்**

| | |
|---|---|
| 1. | தருமபுர ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம். |
| 2. | மருதநாயக முதலியார் அன்னபூரணி அம்மாள் டிரஸ்ட், கோயம்புத்தூர். |

**காது கேளாதோர் – பேச இயலாதோர் பள்ளி**

| |
|---|
| அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல். |

**வேத ஆகம பாடசாலைகள்**

**166.** திருக்கோயில்களின் பூஜை முறைகள், மந்திரங்கள் ஓதுதல், ஆகமங்கள் மற்றும் வேதங்கள் ஆகியவைகளை பயில விரும்புவோருக்கு வேத ஆகம பாடசாலை **1958**ஆம் ஆண்டு முதல் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலிலும், **1959**ஆம் ஆண்டு முதல் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலிலும் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதனைத் தொடர்ந்து **2015–2016**ஆம் ஆண்டு முதல் ‘‘மயிலையே கயிலை’’ என போற்றப்படும் சென்னை, மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும் வேத ஆகம பாடசாலை துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

வைணவ ஆகமங்களுக்கு, ‘‘பூலோக வைகுண்டம்’’ என போற்றப்படும் திருச்சி, ஸ்ரீரங்கத்தில் உள்ள அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலிலும், சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலிலும் வேத ஆகம பாடசாலைகள் **2015–2016** ஆம் ஆண்டு முதல் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது.

**ஓதுவார் பயிற்சி பள்ளிகள்**

**167. 2012–2013** ஆம் ஆண்டு வரவு–செலவு கூட்டத் தொடரின்போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட ‘‘மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் ஓதுவார் பயிற்சி பள்ளிகள் துவங்கப்படும்’’ என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து **15.07.2013** அன்று மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலிலும், **18.08.2014** அன்று திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலிலும் ஓதுவார் பயிற்சி பள்ளிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**168.** இப்பயிற்சி பள்ளியில் சேரும் மாணவர்கள் **8** ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். **13** வயது நிரம்பி இருத்தல் வேண்டும். அதிகபட்சம் **20** வயதிற்கு மேற்படாமல் இருக்கவேண்டும் என்ற தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் பயிற்சிக்கு சேர்க்கப்பட்டுள்ளனர். பயிற்சியில்

சேரும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/–வீதம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**169.** திருக்கோயில்களின் மூலம் நடத்தப்படும் ஓதுவார் பயிற்சி பள்ளியில் சேர்ந்து முறையாக தேர்ச்சி பெற்று சான்றிதழ் பெறும் மாணவர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் ஓதுவார் பணியிடங்களுக்குரிய காலியிடங்களில் அந்தந்த திருக்கோயில்களுக்குரிய காலமுறை ஊதிய விகிதம் அடிப்படையில் பணிநியமனம் செய்வதற்கு ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

**கல்வி நிறுவனங்களுக்கு தரச்சான்று**

**170.** பல்கலைக்கழக மானிய குழுவின் தன்னாட்சி அமைப்பான தேசிய தர மதிப்பீட்டு குழு (NAAC), இந்து சமய அறநிலையத்துறையால் மேலாண்மை செய்யப்படும் கீழ்க்காணும் இரண்டு கல்லூரிகளுக்கு ஒட்டுமொத்த சாதனைகள் மற்றும் சிறந்த செயல்பாடுகளுக்காக ‘A’ தரச்சான்று வழங்கியுள்ளது.

1) பழநி, அருள்மிகு பழநியாண்டவர் ஆடவர் கலை மற்றும் பண்பாட்டு கல்லூரி (17.03.2016 முதல் 16.03.2021 வரை)

2) குற்றாலம், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி (05.11.2016 முதல் 04.11.2021 வரை)

குற்றாலம், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி நாட்டின் தூய்மையான உயர்கல்வி நிறுவனங்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்திய அரசின் மாண்புமிகு மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் 01.10.2018 அன்று சான்றிதழ் வழங்கப்பட்டது.

**சமூக நல நிறுவனங்கள்**

171. திருக்கோயில்கள், வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாது சமூக நோக்கத்தோடு அறநிலையங்களாகவும் செயல்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக மருத்துவமனைகள், மனநலக் காப்பகங்கள், கருணை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியன திருக்கோயில்களால் நிருவகிக்கப்படுகின்றன. இவற்றின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண். | சமூக நல நிறுவனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கருணை இல்லங்கள் | **32** |

| | | |
|---|---|---|
| 2. | மனநலக் காப்பகம் | 1 |
| 3. | முதியோர் இல்லங்கள் | 2 |
| 4. | சித்த வைத்தியசாலைகள் | 6 |
| 5. | ஆங்கில முறை மருத்துவமனைகள் | 2 |
| | **கூடுதல்** | **43** |

**கருணை இல்லங்கள்**

**172.** இந்து சமய அறநிலையத்துறையின் கீழுள்ள நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் ஆதரவற்ற சிறுவர் மற்றும் சிறுமியருக்கு உணவு, இருப்பிடம், கல்வி ஆகிய உதவிகள் அளிக்கும் நோக்கத்துடன் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன. இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள **30** திருக்கோயில்களில் **32** கருணை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சிறுவர் காப்பகங்கள் **21** மற்றும் சிறுமியர் காப்பகங்கள் **11** உள்ளன. கருணை இல்லங்களில் பயின்று பன்னிரண்டாம் வகுப்பு முடித்து மேற்படிப்பு தொடரும் மாணவர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களில் முழுமையான கல்விக் கட்டண விலக்கும், இதர கல்வி நிறுவனங்களில் **50** சதவிகிதம் கல்விக் கட்டணம்

திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கவும் அரசால் 2012–2013–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி 2012–2013 முதல் 2017–2018 ஆம் ஆண்டு வரை 159 மாணவ மாணவிகளுக்கு ரூ.8,30,382/– வழங்கப்பட்டது. 2017–2018 ஆம் ஆண்டிற்கு 36 மாணவ மாணவிகளுக்கு ரூ.1,40,385/– நிதியுதவி வழங்கப்பட்டது. 2018–2019 ஆம் ஆண்டிற்கு 31 மாணவ மாணவிகளுக்கு ரூ.1,29,511/– நிதியுதவி வழங்கப்பட்டது.

**173.** 2011–2012 முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை கருணை இல்லங்களில் சிறுவர், சிறுமியருக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமையாக ரூ.4.12 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2016–2017 முதல் 2018–2019 ஆம் ஆண்டு வரை 38 பணிகள் ரூ.69.60 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. 2019–2020 ஆம் ஆண்டில் 11 பணிகள் ரூ.16.82 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

**பள்ளி, கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள்**

**174.** இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கு ரூ.5 கோடியும், கல்லூரிகளுக்கு அடிப்படை

வசதிகள் செய்வதற்கு ரூ.5 கோடியும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிமாற்றம் மூலம் பெறப்பட்டு இரு மூலதன நிதி உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு தேவையான கட்டடங்கள், ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள், கணினிகள், குடிநீர், கழிப்பறை போன்ற வசதிகளைச் செய்திட நிதியுதவி வழங்கப்படுகிறது.

175. 2011–2012 முதல் 2018–2019 வரை பள்ளி கல்வி நிறுவனங்களின் அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு 328 பணிகள் ரூ.57.97 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. 2019–2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, 14 பணிகள் ரூ.54.73 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

**கோசாலைகள்**

176. திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க ஒருங்கிணைந்த கோசாலைகள் பழநி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் ஆகிய நான்கு இடங்களில் உள்ளன.

**177.** திருக்கோயில்களுக்கு உபயமாக பெறப்படும் உபரி கால்நடைகள் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் விலையின்றி வழங்கப்படுகிறது. திருக்கோயில்களில் இருக்கும் கோசாலைகளை நல்ல முறையில் பேணுவதற்கு வழிகாட்டி நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

## IX – திருக்கோயில்களும் தமிழும்

### "போற்றி" நூல்கள்

**178.** ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் முனிவர்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் இறைவனை செந்தமிழால் போற்றி பாடி வணங்கியுள்ளனர். அவர்களால் பாடப்பட்ட தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், நாலாயிர திவ்ய பிரபந்தம் ஆகியவை தலங்களின் மேன்மையை விவரிப்பதோடு தமிழ் மொழி மேன்மைக்கும் முக்கிய பங்காற்றியுள்ளன. அதனால் தலவரலாற்றோடு பதிப்பிக்கப்பட்டு வருகின்றன. மேலும் சேவார்த்திகள் விருப்பப்படி தமிழில் பூஜை செய்வதை ஊக்குவிக்கவும், முறைப்படுத்தவும், தமிழில் "போற்றி" நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**தமிழ் புத்தாண்டு தின விழா**

**179. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்தால் நெடுங்காலமாக தமிழ் மக்களின் நம்பிக்கை மரபு வழி வந்த முறைகளை மதித்து சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ் புத்தாண்டு கொண்டாடும் வழக்கம் 13.04.2012 அன்று திரும்பக் கொண்டுவரப்பட்டது. இதை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் கொண்டாடினர்.

180. தமிழ் புத்தாண்டு தினத்தையொட்டி ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் முதல் நாள் அன்று அனைத்து முக்கிய திருக்கோயில்களிலும் சிறப்பு பூஜை வழிபாடுகளும், சிறப்பு அன்னதானமும், சமயச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகிறது. அன்றைய தினம் திருக்கோயில்கள் வாழை, மாவிலைத் தோரணங்களுடன் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வருகிறது. தமிழ் புத்தாண்டையொட்டி திருக்கோயில்களில் பஞ்சாங்கம் வாசிக்கப்படுகிறது. பெருவாரியான பக்தர்கள் இப்புத்தாண்டு தினத்தில் திருக்கோயில்களுக்கு வருகை புரிந்து கொண்டாடி வருகின்றனர்.

**பாவை விழா**

**181.** ஆண்டு தோறும் மார்கழி திங்களில் திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டிகள் திருக்கோயில்களில் நடைபெறுவது வழக்கத்தில் உள்ளது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி பாவை விழா மாவட்ட அளவில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. திருப்பாவை, திருவெம்பாவை பண்ணோடு பாடும் போட்டி, கட்டுரைப் போட்டி என நான்கு தலைப்புகளில், ஐந்தாம் வகுப்பு வரை, ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை மற்றும் ஒன்பது முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை என மூன்று பிரிவுகளில் தனித்தனியாக போட்டிகள் நடத்தப்படுகின்றன. **2019–2020** ஆம் ஆண்டு மாவட்ட அளவில் **37** மாவட்டங்களில் **8383** மாணவ மாணவியர் பங்கேற்புடன், **1452** மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கி பாவை விழா வெகு சிறப்புடன் நடத்தப்பட்டது.

**2019–2020**ஆம் ஆண்டு முதன் முறையாக மாநில அளவில் போட்டிகள் **13.01.2020** அன்று சென்னையில் நடத்தப்பட்டது. இதில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற **322** மாணவர்கள் பங்கேற்றனர். இப்போட்டிகளில் முதல்

மூன்று இடங்களில் வெற்றி பெற்ற **36** மாணவ, மாணவிகளுக்கு முதல் பரிசாக ரூ.**10,000**, இரண்டாம் பரிசாக ரூ.**5,000**, மூன்றாம் பரிசாக ரூ.**2,500** என மொத்தம் ரூ.**2.10** லட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கி பாராட்டினார்கள். மேலும், மாநில போட்டியில் பங்கேற்ற அனைத்து மாணவ, மாணவியருக்கும் கலந்து கொண்டமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**இசைவாணர்கள் நியமனம்**

**182.** திருக்கோயில்களில் திருவிழாக்களின் போது மங்கள இசை இசைக்கப்படுவது வழக்கம். இவ்வழக்கம் திருக்கோயில்களின் நிதிப் பற்றாக்குறை காரணமாகக் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்களிலும், நாயன்மார்களால் பாடல்பெற்ற புகழ்வாய்ந்த தொன்மையான திருக்கோயில்களிலும், நாதஸ்வரம், தவில், தாள இசைவாணர்களை நியமனம் செய்து அவர்களுக்கு முறையே ரூ.**1,500/–**, ரூ.**1,000/–** மற்றும் ரூ.**750/–** வீதம் மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ரூ.**1** கோடி

முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகை மூலம் அவர்களுக்கு இவ்வூதியம் வழங்கப்படுகிறது.

## X - அருளாளர்கள் விழா

### சேக்கிழார் விழா

**183.** இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் தெய்வச் சேக்கிழார் பிறந்த இடமான சென்னை, குன்றத்தூரில் சேக்கிழார் திருநட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் சேக்கிழார் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவிற்கு இதற்கென ஏற்படுத்தப்பட்ட மூலதன நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும் ஆகஸ்ட் திங்கள்தோறும் 12 நாட்களுக்கு பன்னிரு திருமுறை விழாவும், சேக்கிழார் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

### திருஞானசம்பந்தர் இசை விழா

**184.** சிறந்த சமய அருளாளரான திருஞானசம்பந்தரைப் போற்றும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருஞானசம்பந்தர் இசை விழா

ஆண்டுதோறும் வைகாசி மாதம் மூல நட்சத்திர தினத்தன்று கொண்டாடப்படுகிறது. இதற்கான செலவு பொதுநல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

**ஔவையார் விழா**

**185.** நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் தமிழ் மூதாட்டி ஔவையார் கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் சதய நட்சத்திரத்தன்று ஔவையார் விழா கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் துளசியாப்பட்டினத்தில் நடைபெறும் இந்த விழாவிற்கு இதற்கான மூலதன நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

**தாயுமானவர் விழா**

**186.** தமிழ் ஞானப் பாடல்களை உலகிற்கு அருளிய தாயுமானவ அடிகளைப் போற்றும் வகையில் தாயுமானவர் விழா திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

## திருவள்ளுவர் திருநாள்

**187.** ஒவ்வொரு ஆண்டும் தைத் திங்கள் இரண்டாம் நாளன்று சென்னை, மயிலாப்பூரில் அமைந்துள்ள தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்கோயிலில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின்போது பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, ஒப்புவித்தல் போட்டி, கட்டுரைப்போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும் கருத்தரங்கங்களும், பட்டிமன்றங்களும் நடத்தப்படுகின்றன.

## அருணகிரிநாதர் விழா

**188.** அருளாளர் அருணகிரிநாதருக்கு திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ஆவணி மாதம், ‘‘கேட்டை’’ நட்சத்திரத்தன்று ‘‘முக்திப்பேறுவிழா’’ ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மேலும், திருவண்ணாமலையில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அருணகிரிநாதர் மணி மண்டபம் கட்டப்பட்டு வருகிறது.

**கோச்செங்கட்சோழ நாயனார் விழா**

**189.** அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான அருட்திரு கோச்செங்கட்சோழ நாயனார் அவதரித்த திருநாளான மாசி மாதத்தில், சதய நட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் “கோச்செங்கட்சோழ நாயனார் விழா” திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் கொண்டாடப்படுகிறது.

**ஆழ்வார்கள் விழா**

**190.** ஆண்டுதோறும் பன்னிரு ஆழ்வார்களுக்கும் அவரவர் திருநட்சத்திர நாளில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் “ஆழ்வார்கள் விழா” சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

## XI - வெளியீடுகள்

**தலவரலாறு மற்றும் தலபுராணம்**

**191.** திருக்கோயில்களின் தொன்மை, புராணங்கள், கட்டடக் கலை, கல்வெட்டுச் செய்திகள், வழிபாட்டுச் சிறப்புகள் (வரலாறு, முக்கியத்துவம்) ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் தலவரலாற்று நூல்கள்

வெளியிடப்படுகின்றன. சிறு திருக்கோயில்களுக்கு அவற்றின் வழிபாட்டுச் சிறப்புகளை அறிந்து கொள்ள ஏதுவாக தகவல் அட்டைகள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன.

**பயணியர் மாவட்ட கையேடுகள்**

**192.** பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள திருக்கோயில்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக, முக்கியமான நகரங்களில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள திருக்கோயில்கள் தொடர்பான விவரங்களைச் சேகரித்து அனைத்து மாவட்டங்களுக்கும் தனித்தனியே பயணியர் கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய கையேடுகள் பக்தர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழிகாட்டி என்பதைக் கருத்தில் கொண்டு இவை இந்து சமய அறநிலையத்துறை வலைதளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளன.

**“திருக்கோயில்”– திங்களிதழ்**

**193.** இந்து சமய அறநிலையத்துறையால் **1958** ஆம் ஆண்டு முதல் “திருக்கோயில்” என்ற பெயரில் திங்களிதழ்

வெளியிடப்படுகிறது. இந்த மாத இதழ் தலைசிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள், துணுக்கு செய்திகள் மற்றும் ஆன்மீக வினாவிடைகள் என எழில்மிகு வண்ணங்களுடன் வெளியிடப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டு முதல் இவ்விதழில் பக்கங்கள் கூடுதலாக்கப்பட்டு இணையதள இயங்கலையிலும் (Online) பார்த்து படித்து பயனடையும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இவ்விதழைப் இயங்கலையிலேயே (Online) சந்தா செலுத்தி பெறுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**சமய நூல்கள் விற்பனை**

**194.** தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம், **06.01.2017** முதல் **19.01.2017** வரை சென்னையில் புத்தகக் கண்காட்சி நடத்தியது. இதில் இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் முதன் முறையாக துறைக்கென ஒரு புத்தக விற்பனை அரங்கு அமைக்கப்பட்டு துறை வெளியீடுகளான மாவட்டக் கையேடுகள், இந்து மத இணைப்பு விளக்கம், சைவமும் வைணவமும், சைவ சமயக் களஞ்சியங்கள், திருக்கோயில் நாள்காட்டிகள், திருக்கோயில் தலவரலாறுகள் மற்றும் ‘திருக்கோயில்’ மாத இதழ்கள் ஆகியன விற்பனைக்கு வைக்கப்பட்டன. இத்திட்டம் ஆன்மீக

அன்பர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து இணையதள இயங்கலை (Online) மூலமாக உரிய தொகையினைச் செலுத்தி ஆன்மீக அன்பர்கள் துறை மூலமாக வெளியிடப்படும் சமயநூல்களை எளிதாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**ஆகம நூல்கள் மற்றும் இதர நூல்கள் தமிழில் வெளியிடுதல்**

**195.** வடமொழி ஆகம சாஸ்திர நூல்களும், சிற்ப சாஸ்திர நூல்களும் தமிழர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அந்த வகையில் ‘‘உத்ரகாமிக ஆகமம்’’ மற்றும் ‘‘குமார தந்திரம்’’ ஆகிய நூல்கள் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. மேலும் ‘‘இந்து மத இணைப்பு விளக்கம்’’, ‘‘சைவமும் வைணவமும்’’ மற்றும் ‘‘ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்ப நூல்’’ ஆகிய தமிழ் நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

## XII - பயிற்சித் திட்டங்கள்

**புத்தொளிப் பயிற்சி**

**196.** திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் தங்கள் பணிகளைத்

திறம்பட செய்திட ஏதுவாக **1991** ஆம் ஆண்டு ‘‘புத்தொளிப் பயிற்சித் திட்டம்’’ தொடங்கப்பட்டது. **2006–2007** முதல் **2010–2011** ஆம் ஆண்டு வரை இப்பயிற்சி அளிக்கப்படவில்லை. இப்பயிற்சியின் முக்கியத்துவம் உணர்ந்து அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் பயன்பெறும் வகையில் ஆறு வார கால புத்தொளிப் பயிற்சி மீண்டும் தொடங்கப்பெற்று, **2011–2012** முதல் **2015–2016** ஆம் ஆண்டு வரை **8436** ஊழியர்கள் பயனடைந்தனர். **2016–2017** ஆம் ஆண்டில் **1524** அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் மற்றும் ஓதுவார்கள் ஆகியோருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. **2017–2018** ஆம் ஆண்டில் **2090** பணியாளர்களுக்கு புத்தொளிப் பயிற்சி அளிக்கப்பட்டது. **2018–2019** ஆம் ஆண்டில் **2144** பணியாளர்களுக்கு புத்தொளிப் பயிற்சி அளிக்கப்பட்டது. **2019–2020** ஆம் ஆண்டில், **03.02.2020** முதல் **21.03.2020** முடிய **6** வார கால பயிற்சி நடைப்பெற்று வருகிறது. இப்பயிற்சியில் **29.02.2020** வரை **1011** நபர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பூசாரிகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் **26.03.2020** முதல் **12.05.2020** வரையிலான **6**

வார காலத்திற்கு புத்தொளி பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பொறியாளர்களுக்கு "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு" என்னும் குறுகிய கால பயிற்சி**

**197.** நாட்டில் முதல் முறையாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு" என்ற தலைப்பில் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் திருக்கோயில்களைச் சேர்ந்த பொறியாளர்களுக்கு ஆறு வார குறுகியகாலப் பயிற்சியாக, முதற்கட்ட பயிற்சி **22** பொறியாளர்களுக்கு **03.12.2014** முதல் **13.01.2015** வரையும், இரண்டாம் கட்டமாக **22** பொறியாளர்களுக்கு **19.03.2015** முதல் **29.04.2015** வரையும் நடத்தப்பட்டது. மூன்றாம் கட்டமாக **08.09.2016** முதல் **19.10.2016** வரை பொறியாளர்கள், ஸ்தபதிகள் மற்றும் திருக்கோயிலில் பணிபுரியும் தொழில்நுட்ப பணியாளர்களையும் சேர்த்து மொத்தம் **40** நபர்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டது.

**திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கு ‘‘பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு’’ என்னும் குறுகிய கால பயிற்சி**

**198.** தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை சார்பில் ‘‘பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு’’ என்ற இரு வார குறுகிய கால பயிற்சி திருக்கோயிலில் பணிபுரியும் செயல் அலுவலர்களுக்கு **3** கட்டங்களாக நடத்தப்பட்டது. முதற்கட்டமாக **08.09.2016** முதல் **19.10.2016** முடிய ஒரு அணிக்கு **25** செயல் அலுவலர்கள் வீதம் **3** அணிகளாக மொத்தம் **75** செயல் அலுவலர்களுக்கும், இரண்டாவது கட்டமாக **28.08.2017** முதல் **09.10.2017** முடிய ஒரு அணிக்கு **25** செயல் அலுவலர்கள் வீதம் **3** அணிகளாக மொத்தம் **75** செயல் அலுவலர்களுக்கும், மூன்றாவது கட்டமாக **12.11.2018** முதல் **07.01.2019** முடிய ஒரு அணிக்கு **41** செயல் அலுவலர்கள் வீதம் **4** அணிகளாக மொத்தம் **164** செயல் அலுவலர்களுக்கும் பயிற்சி நடத்தப்பட்டது.

**மனிதநேயப் பயிற்சி**

**199.** திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் இறையுணர்வை மதித்து வழிபாட்டு முறைகளைக் கனிவோடு செய்திட திருக்கோயில்களில்

பணிபுரியும் அர்ச்சகர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டு கடந்த ஒன்பது ஆண்டுகளில் **29,172** ஊழியர்களுக்கு மனிதநேயப் பயிற்சி அளிக்கப்பட்டது. **2019–2020** ஆம் ஆண்டில் **3,029** திருக்கோயில் ஊழியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. ஆண்டுதோறும் திருக்கோயில் ஊழியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**சுயம்பாகிகள் (மடப்பள்ளி சமையற்காரர்கள்), அன்னதான சமையற்காரர்கள் மற்றும் பிரசாதக் கடை ஒப்பந்ததாரர்களுக்கான பயிற்சி**

**200.** திருக்கோயில்களில் வழங்கப்படும் பிரசாதங்கள், அன்னதான உணவுகள் ஆகியவற்றை தரமானதாகவும், சுகாதாரமாகவும் சேவார்த்திகளுக்கு வழங்கும் எண்ணத்தோடு மத்திய அரசு நிறுவனமான இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம் (FSSAI) மூலம் சென்னை நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள திருக்கோயில்கள் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர்

திருக்கோயில், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், மாங்காடு, அருள்மிகு காமாட்சி அம்மன் மற்றும் வைகுண்டப் பெருமாள் திருக்கோயில் மற்றும் வடபழநி, அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பணியாற்றி வரும் சுயம்பாகிகள், அன்னதான சமையற்காரர்கள் மற்றும் பிரசாதக் கடை ஒப்பந்ததாரர்களுக்கு சென்னை, வடபழநி, அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் 2 நாட்கள் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இதில் 80 திருக்கோயில்களில் பணியாற்றி வரும் 142 நபர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

201. இதே போன்று 01.09.2017 மற்றும் 02.09.2017 ஆகிய இரு நாட்களில் சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில், 10 பெரிய திருக்கோயில்கள் மற்றும் திருச்சிராப்பள்ளியைச் சுற்றியுள்ள பல்வேறு திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், பரிச்சாரகர்கள், பிரசாத கடை

ஒப்பந்ததாரர்கள், பண்டக எழுத்தர்கள் உட்பட **150** நபர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

**202.** மேலும் கடந்த **11.01.2018** அன்று புதுதில்லியில் "இறைவழிபாட்டு தலங்களில் உணவு பாதுகாப்பு முறைகள்" (Blissful Hygienic Offering to God-BHOG) என்ற தலைப்பில் நடைபெற்ற பயிலரங்கில் இத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**203.** இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையத்தால் (FSSAI) **14.12.2018** முதல் **16.12.2018** முடிய புதுதில்லி, இந்திரா காந்தி தேசிய மையத்தில் நடத்தப்பட்ட National Eat Right Mela-ல் இந்திய திருக்கோயில்களின் உணவுகள் (Temple Foods of India) எனும் தலைப்பின் கீழ் அமைக்கப்பட்ட அரங்கில் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் மற்றும் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்களில் தயாரிக்கப்பட்ட பிரசாதங்கள் இத்துறையின் சார்பாக காட்சிப்படுத்தப்பட்டது.

**204.** இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையத்தின் (FSSAI) தர நிர்ணயப்படி, சுகாதாரமான முறையில் இறைவனுக்கு பிரசாதம் படைத்த வகைக்கு பாராட்டி, **26.01.2020** அன்று குடியரசு தின விழாவில் **Blissful Hygienic Offering to God** (BHOG) நற்சான்றிதழ் தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயிலுக்கும் மற்றும் திருநெல்வேலி நகர், அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோயிலுக்கும் வழங்கப்பட்டது.

**திறன் மேம்பாட்டுப் பயிற்சி**

**205.** தமிழகத் திருக்கோயில்கள் மனித வாழ்வின் எல்லா செயல்பாடுகளுக்குமான மையமாக தொன்று தொட்டு இருந்து வந்துள்ளன. திருக்கோயில்களுக்கும் பக்தர்களுக்கும் சேவையை வழங்குவோர் பலவகையினர் உள்ளனர். அவர்கள் உலோகச் சிற்பிகள், கைவினைஞர்கள், கட்டட வல்லுநர்கள், நெசவாளர்கள், பொற்கொல்லர்கள், அர்ச்சகர்கள், கிராமக்கோயில் பூசாரிகள், இசைவாணர்கள், நடனக் கலைஞர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், பூஜைப்பொருள் விற்பனையாளர்கள், பூமாலை கட்டுவோர்,

நந்தவனக் காப்பாளர்கள், பரிச்சாரகர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், ஓவியக் கலைஞர்கள், சமயச் சொற்பொழிவாளர்கள் ஆவர். காலப்போக்கில் போதிய அளவு ஆதரவு இல்லாமல் போனதால் இவர்களில் பலரும் நலிவடைந்து அவர்களிடமிருந்த மதிப்புமிக்க திறன்களும் மறைந்து போகும் நிலையில் உள்ளன. இவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

**206.** அதன்படி **2016–2017** ஆம் ஆண்டில் **2094** கிராமக்கோயில் பூசாரிகளுக்கு **11** இணை ஆணையர் மண்டலங்களில் ஒரு வார கால திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சியில் கலந்து கொண்ட ஒவ்வொரு பூசாரிக்கும் ஊக்கத் தொகையாக தலா ரூ.**1,000/–** வழங்கப்பட்டது.

**207.** தவில், நாதஸ்வர கலைஞர்களுக்கு ஒருமாத கால திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் பொருட்டு, பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் பயிற்சி வகுப்புகள் **5** கட்டங்களாக நடைபெற்றது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட **310** கலைஞர்களுக்கு தலா ரூ.**5,000/–** ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

**208.** தமிழகத் திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் ஆகியோருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி **13.02.2017** முதல் **10.03.2017** முடிய நான்கு வார காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் **1524** அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் கலந்து கொண்டுள்ளனர். இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தலா ரூ.**2,000/–** ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது. திருக்கோயில்களில் நந்தவனக் காப்பாளர், மாலைக்கட்டி ஆகிய பணிகளில் பணியாற்றும் **351** நபர்களுக்கு **20.03.2017** முதல் **24.03.2017** வரை மற்றும் **02.05.2017** முதல் **16.05.2017** வரை திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

**209.** திருக்கோயில்களில் பிரசாதம் தயாரிக்கும் பணிகளில் ஈடுபடும் பரிச்சாரகர், சுயம்பாகி ஆகிய **221** நபர்களுக்கு, **06.03.2017** முதல் **10.03.2017** வரை ஒருவார கால திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ.**1,000/–** வழங்கப்பட்டது.

**210. 2017–2018** ஆம் ஆண்டில் **4** இணை ஆணையர் மண்டலங்களில், கைவினைஞர்கள் உலோக சிற்பிகள்

மற்றும் பூஜை பொருட்கள் தயாரிப்பாளர்களுக்கு, 3 மாத கால திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள் உரிய பயிற்சியாளர்கள் மூலம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தலா ரூ.5,000/– ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

**211.** **04.05.2018** முதல் **20.06.2018** வரை சென்னை இணை ஆணையர் மண்டலத்தில், நெசவாளர்களுக்கு ஒரு மாத கால பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தலா ரூ.5,000/– ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

## XIII - திருக்கோயில் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள்

**நலத்திட்ட விவரங்கள்**

**212.** இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் பணியாளர்கள் பல்வேறு வகையினத்தில் பணிபுரிகின்றனர். இவர்களது நலன் காத்திட ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு:–

| வ. எண். | நலத்திட்ட விவரங்கள் |
|---|---|
| 1. | குடும்ப நல நிதித் திட்டம் |
| 2. | சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் |

| | |
|---|---|
| 3. | மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் |
| 4. | ஆலய ஊழியர்கள் நல நிதித் திட்டம் |
| 5. | கருணை அடிப்படையில் பணி நியமனம் |
| 6. | அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக்கலைஞர்கள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம் |
| 7. | திருக்கோயிலில் பணிபுரியும் இதர பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் |
| 8. | திருக்கோயில் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் திட்டம் |

**குடும்ப நல நிதித் திட்டம்**

**213.** பணியிலிருக்கும்போது இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்காக ‘‘குடும்ப நல நிதித் திட்டம்’’ ஏற்படுத்தப்பட்டது. திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து இதற்கென ரூ.**15** கோடி மைய நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, பணியிலிருக்கும்போது இயற்கை எய்திய பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.**1** இலட்சம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. **2011–2012** முதல் **2018–2019** ஆம் ஆண்டு வரை **473** வாரிசுதாரர்களுக்கு ரூ.**4.66** கோடி வழங்கப்பட்டது. **2019–2020** ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம்

வரை, 33 வாரிசுதாரர்களுக்கு ரூ.36.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**214.** அரசாணை (நிலை) எண்.47, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி. 4–1) துறை, நாள்.20.05.2019–இல், இத்தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்**

**215.** ரூ.1 இலட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில்களின் பணியாளர்களின் நலனுக்காக ‘‘சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்’’ ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.50 இலட்சத்தைக் கொண்டு மைய நிதி ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு திருக்கோயில் பணியாளரும் ஓய்வு பெறும்போது அவரது பணி நாளில் செலுத்திய மொத்த சந்தாத் தொகையுடன், இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் வட்டி தொகையிலிருந்து ரூபாய் 1000/– வழங்கப்பட்டு வந்தது. இத்தொகை டிசம்பர் 2008 முதல் ரூபாய் 5,000/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. 2011–2012 முதல் 2018–2019 ஆம் ஆண்டு வரை 791 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு

ரூ.**36.83** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, **67** ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ரூ.**3.35** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

**216.** இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் திருக்கோயில் பணியாளர்களில் ரூ.72,000/–க்கும் (ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறுவோர்) அதிகமாக ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதலமைச்சரின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்–2012–ன்கீழ் பயன்பெற **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் ஆணையிடப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் **3705** திருக்கோயில் பணியாளர்கள் பதிவு செய்துள்ளனர்.இதன் மூலம் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெறுகின்றனர்.

**217. 2013** ஆம் ஆண்டில் ரூ.72,000/– மற்றும் அதற்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்

திட்டத்தின் கீழ் பயன்பெற **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் ஆணையிடப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் 10,391 திருக்கோயில் பணியாளர்கள் பதிவு செய்துள்ளனர். இதன்மூலம் பணியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெறுகின்றனர்.

**ஆலய ஊழியர்கள் நல நிதி**

**218.** நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடி பெறப்பட்டு ''ஆலய ஊழியர்கள் நல நிதி'' என்ற ஒரு மைய நிதி உருவாக்கப்பட்டு 1992 முதல் செயல்படுகிறது. ஆண்டு வருவாய் ரூ.1 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில் ரூ.750/—க்கும் குறைவாக மாத ஊதியம் பெறுகின்றவர்களின் ஊதிய நிலுவைத் தொகை மேற்கண்ட மைய நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையினை கொண்டு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 2011—2012 முதல் 2018—2019 வரை 10,963 திருக்கோயில்களில் பணிபுரியும் 14,009 (2009 முதல் 2015 வரையிலான ஊதிய நிலுவை) பணியாளர்களுக்கு ரூ.8.54 கோடி ஊதிய நிலுவை வழங்கப்பட்டது. 2019—2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்

வரை, **5,869** திருக்கோயில்களில் பணிபுரியும் **7,670 (2016** மற்றும் **2017** ஆம் ஆண்டுகளுக்கான ஊதிய நிலுவை) பணியாளர்களுக்கு ரூ.**6.04** கோடி ஊதிய நிலுவை வழங்கப்பட்டுள்ளது.

**கருணை அடிப்படையில் பணிநியமனம்**

**219.** திருக்கோயில்களில் பணியாற்றும்போது, இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ‘‘கருணை அடிப்படையில் பணிநியமனம்'' செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் **181** வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டன. **2019–2020** ஆம் ஆண்டில் **25** வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டது.

**220.** திருக்கோயில்களில் தற்காலிகமாக தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் **31.07.2014** தேதியில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக பணியாற்றி வந்த **2217** பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம்

**221.** திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு அரசு நிதியிலிருந்து இந்து சமய அறநிலையத்துறை மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.750/– ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

222. **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ரூ.750/– மாத ஓய்வூதியத்தை ரூ.1,000/– ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்கள். இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 364 ஓய்வுபெற்ற பணியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

## திருக்கோயிலில் பணிபுரியும் இதரப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

223. திருக்கோயில் பணியாளர்களுக்கென இருவகை ஓய்வூதியத் திட்டங்கள் 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(i) பணியாளர் சேமநல நிதித் திட்டம்**

நிதி வசதிமிக்க திருக்கோயிலில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும். திருக்கோயில் பணியாளர்களில் ஓய்வுபெற பத்து ஆண்டிற்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களுக்கு, பணியாளர் சேமநல நிதித் திட்டத்தின் கீழ் **01.03.2006** முதல் ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**(ii) துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்**

நிதிவசதி குறைவாக உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கும், பணியாளர் சேமநல நிதித் திட்டம் கொண்டு வரப்பட்ட நாளில் **(01.03.2006)** ஓய்வுபெற பத்து ஆண்டிற்குக் கீழ் பணிக்காலம் உள்ளவர்களுக்கும், பணியாளர் சேமநல நிதித்திட்டத்தில் சேரும் அளவு நிதிவசதியில்லாத திருக்கோயில்களில் பணியாற்றுபவர்களுக்கும் துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் திட்டம் **2006** ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

**224. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி **1996** ஆம் ஆண்டிற்கு முன்னர் திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர்களுக்கும் துறைநிலையிலான ஓய்வூதியத்

திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 67 ஓய்வுபெற்ற பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**225.** இந்த துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் அளிப்பதற்கு ஏதுவாக, நிதிவசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து ரூ.50 கோடி உபரிநிதியினைப் பெற்று மூலதன நிதி உருவாக்கப்பட்டது. அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து ஓய்வுபெறும் திருக்கோயில் பணியாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ஓய்வூதியம் ரூ.1,000/– வழங்கப்பட்டது. பின்னர் ஓய்வூதியம் ரூ.1,000/–லிருந்து ரூ.2,000/–ஆக 01.10.2016 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென மேலும் ரூ.15 கோடி உபரி நிதி முதுநிலை திருக்கோயில்களிலிருந்து பெறப்பட்டு மூலதன நிதி உயர்த்தப்பட்டுள்ளது.

**226.** 2019–2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை, கூடுதலாக 79 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை மொத்தம் 4,729 பணியாளர்களுக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## குடும்ப ஓய்வூதியம்

அரசாணை (நிலை) எண்.285, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி 4–1) துறை நாள் 14.12.2015–ன்படி, துறை நிலையிலான ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால், அவரின் நேரடி வாரிசான கணவன்/மனைவிக்கு மட்டும், அவர்தம் வாழ்நாள் முழுவதும் கடைசியாக பெற்ற மாத ஓய்வூதியத்தில் 50% தொகை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வரை இத்திட்டத்தின் கீழ் 67 பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

## திருக்கோயில் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் திட்டம்

**227.** அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பட்டப்படிப்பு பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகளுக்கு முதல் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 25 சதவீதத் தொகை நிதியுதவியாக வழங்க இத்திட்டம் வழிவகை செய்கிறது.

**திருக்கோயில் பணியாளர்களுக்கு திருத்திய ஊதிய நிர்ணயம்**

**228.** அரசாணை (நிலை) எண்.91, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4–1) துறை, நாள்.28.06.2019–ல் திருக்கோயில் பணியாளர்களுக்கு திருத்திய ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## XIV - கிராமக்கோயில் பூசாரிகள் நலத்திட்டங்கள்

**கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்**

**229.** இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கிராம திருக்கோயில்களில் பூஜை செய்யும் பூசாரிகளுக்கு ‘‘கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்’’ உருவாக்கப்பட்டு அதன் மூலமாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

**கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்**

**230.** இந்து சமய அறநிலையத்துறையின் நேரடி ஆளுகையின் கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை நிறைவு செய்து ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியத்தை

**22.11.2013** முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.750/—லிருந்து ரூ.1,000/— ஆக உயர்வு செய்து வழங்க **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டார்கள். இத்திட்டத்தின் கீழ் இதுவரை **3281** கிராமக் கோயில் பூசாரிகள் பயன்பெற்றுள்ளனர்.

## XV – துறை மற்றும் திருக்கோயில்களின் செயல்பாடுகள் கணினிமயமாக்குதல்

**231.** திருக்கோயில் சேவார்த்திகள் வசதிக்காக சேவைகள் தொடர்பான விவரங்கள் மற்றும் திருக்கோயில் நிர்வாகம் மேம்படுத்தவும், ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வலை முகப்பு (Intergrated Temple Management System) தயாரிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள தொன்மையான திருக்கோயில்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வடிவமைக்கப்பட்ட விலை மதிப்பற்ற உலோக விக்கிரகங்கள், கற்சிலைகள் மற்றும் நிலம், கட்டடம் போன்ற அசையா சொத்துக்கள் பற்றிய அனைத்து விவரங்களும் கணினிமயமாக்கப்பட்டு திருக்கோயில்களுக்கான தகவல் தொகுப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. தேசிய தகவல் மையத்தின்

(NIC) உதவியுடன் திருக்கோயில் சொத்துக்களின் அமைவிடங்கள் புவியியல் தகவல் முறைமை (Geographic Information System) மூலம் எளிதாக அறியும் வகையில் வரைபடங்களில் குறிப்பிடுதல், புவியிடங்காட்டி (Global Positioning System) மூலம் திருக்கோயில் சொத்துக்கள் முறையாக அளவை செய்து ஆவணப்படுத்துதல், திருக்கோயில்களில் இணையதள சேவை மூலம் அறை ஒதுக்கீடு, தங்கத்தேர், அன்னதான நன்கொடை போன்ற சேவைகள் ஆகியன வலைதளம் மூலமாகவும், கைபேசி குறுஞ்செயலி மூலமாகவும் பெறுவதற்கு வசதியாக மென்பொருள் தயாரிக்கப்பட்டு வருகிறது. மின் ஆளுமை குறித்து அனைத்து சார்நிலை அலுவலகங்கள்/இத்துறை மற்றும் திருக்கோயில் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, இணை ஆணையர்/ துணை ஆணையர்/ உதவி ஆணையர் / செயல் அலுவலர்கள் நிலையில் உள்ள அலுவலர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்களுக்கு பல கட்டங்களாக பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

**232.** தேசிய தகவல் மையத்தின் (NIC) மூலம் உருவாக்கப்பட்டு வரும் ITMS-ல் முதல்கட்டமாக 1) அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர்,

2) அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, 3) அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, 4) அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி 5) அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர் ஆகிய 5 முதுநிலை திருக்கோயில்களின் இணையதளம், முழுமையாக வடிவமைக்கப்பட்டு 24.12.2018 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. அடுத்த கட்ட ITMS வடிவமைப்பு பணிகள் தேசிய தகவல் மையத்தின் (NIC) மூலம் உருவாக்கப்பட்டு 47 முதுநிலை திருக்கோயில்களுக்கான இணையதளம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக 1174 பட்டியலைச் சார்ந்த திருக்கோயில்களுக்கான இணையதளம் வடிவமைக்கப்பட்டு அவற்றில் திருக்கோயில் பற்றிய பொதுவான விபரங்கள் பதிவேற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

233. இத்துறை அலுவலகங்களை கணினிமயமாக்குதலின் ஒரு பகுதியாகவும், காகித பயன்பாட்டினை குறைக்கும் நோக்கிலும், ஆணையர் அலுவலகத்தில் பணியாற்றும்

அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், மண்டல இணை ஆணையர்கள் மற்றும் சரக உதவி ஆணையர்கள் ஆகியோர்களுக்கு @tn.gov.in மின்னஞ்சல் முகவரி உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

## XVI – விருதுகள்

**234. 1959–**ஆம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் நோக்கங்களை முறையாக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கு துறை செயல்பட்டு வருகிறது. இதில் முதன்மையாக திருக்கோயில்களின் பாதுகாப்பு, பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய திருப்பணி, அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பாதுகாப்பு மற்றும் சேவார்த்திகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல் போன்ற பணிகளை இத்துறை செய்து வருகிறது. இதற்கும் மேலாக, ஒவ்வொரு திருக்கோயில் தொடர்புடைய சமயம் மற்றும் கலாச்சார வழக்கங்களை பாதுகாத்தும் வருகிறது. இதனை அங்கீகரித்து கீழ்க்காணும் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன:-

- சிறந்த நிருவாகத்தை உறுதிப்படுத்தும் தரமான சேவை மேம்பாட்டுக்கான **“சிறந்த நடைமுறைகள்**

**விருது**” (Best Practices Award), **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களால் **15.08.2015** அன்று திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டது.

- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலை **“தூய்மையான புனித தலமாக”** தேர்வு செய்து, ‘தூய்மை இந்தியா’ (Swachh Bharath) விருது இந்திய அரசால் **02.10.2017** அன்று வழங்கப்பட்டது.
- ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் பழைமை மாறாமல் திருப்பணி மேற்கொண்டதற்காக **2017 UNESCO Asia-Pacific Heritage Award of Merit for Conservation** விருது யுனெஸ்கோ அமைப்பால் **01.11.2017** அன்று வழங்கப்பட்டது.
- இணையதள வழி வருடாந்திர வாக்களிப்பு செயல்முறைகளின் அடிப்படையில், **சிறந்த தொன்மையான தலம்** பிரிவில், **இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு விருது–2019ன்** இரண்டாம் பரிசு,

ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை மூலம் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் அமைக்கப்படும் அறநிலையத்துறை அரங்கிற்கு ஆண்டுதோறும் முதல் இடம் / சிறப்பு அந்தஸ்திற்கான விருது வழங்கப்பட்டு வருகிறது. 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற 44–வது இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் **சிறந்த அரங்கிற்கான விருதும்**, 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற 45–வது இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் **மாநில அரசுத் துறை பிரிவில் முதல் பரிசும்,** 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற 46–வது இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் **சிறந்த அரங்கிற்கான விருதும்** இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

# நிறைவுரை

திருக்கோயில்களின் சொத்துக்களை பாதுகாப்பது மற்றும் பக்தர்களின் தேவைகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்ட திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கு இந்து சமய அறநிலையத்துறை அயராது பாடுபட்டு வருகிறது.

பக்தர்களின் நலன் கருதி திருக்கோயில்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் செயல்படும் அதே வேளையில், திருக்கோயில்களின் வருவாயினை பெருக்குவதிலும் துறை அக்கறை செலுத்துகிறது. திருக்கோயில்களில் நடைபெறும் பூஜைகள் ஆகமத்தின்படியும், திருக்கோயில் பழக்க வழக்கங்களின்படியும் நடைபெறுவதையும் கண்காணிக்கிறது. மேலும், திருக்கோயில்களின் நிருவாகத்தை மேற்பார்வையிடும் அதே வேளையில் நமது மொழி மற்றும் கலாச்சாரத்தின் அடையாளமாக திருக்கோயில்களை நிலைநிறுத்துவதில் துறை ஆழ்ந்த அக்கறை செலுத்துகிறது.

**சேவூர் சோ. இராமச்சந்திரன்**
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 08.11.2019 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு வருடந்தோறும், நாள் முழுவதும் இலவச லட்டு பிரசாதம் வழங்கும் திட்டத்தை காணொலிக் காட்சி (Video Conference) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும், இரத்தினகிரி – அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், ஆலங்குடி –அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரசுவாமி திருக்கோயில், பீர்க்கன்காரணை – அருள்மிகு சூராத்தம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 08.11.2019 அன்று தலைமைச் செயலகத்தில், அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத்துறை, நிலை – 3 செயல் அலுவலர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட 96 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 03.02.2020 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி சென்னை, கே.கே.நகர், அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.



மாங்காடு, அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயிலில் 03.02.2020 அன்று நடைபெற்ற அண்ணா நினைவு நாள் சமபந்தி விருந்தின்போது இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பக்தர்களுக்கு இலசவ வேட்டி சேலைகளை வழங்கினார்.



**01.12.2019** அன்று நடைபெற்ற ஸ்ரீரங்கம், அருள்மிகு சிங்கபெருமாள் கோயில் சம்ரோக்ஷணம்.



**05.02.2020** அன்று நடைபெற்ற திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருகுடமுழுக்கு விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பங்கேற்றார்.



கோயம்புத்தூர் மாவட்டம், தேக்கம்பட்டி, மேட்டுப்பாளையத்தில் திருக்கோயில்களுக்கு சொந்தமான யானைகளுக்கு 2019 –20 ஆண்டுக்காக நடைபெற்ற யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்.



கோயம்புத்தூர் மாவட்டம், தேக்கம்பட்டி, மேட்டுப்பாளையத்தில் திருக்கோயில்களுக்கு சொந்தமான யானைகளுக்கு 2019 –20 ஆண்டுக்காக நடைபெற்ற யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் முடிந்து திருக்கோயில்களுக்கு செல்லும் யானைகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கொடியசைத்து அனுப்பி வைத்தார்கள்.



**09.03.2020** அன்று சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற **46–**வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி நிறைவு விழாவில் மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார் அவர்கள் “**ஒட்டு மொத்த சிறந்த அரங்குக்கான விருதினை**” இந்து சமய அறநிலையத்துறை முதன்மைச் செயலர்/ஆணையர் திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார். அருகில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., உள்ளனர்.



சங்கரன்கோயில், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலுக்கான நெய்வேத்தியம் மற்றும் பிரசாதம் மிகவும் சுகாதாரமாக தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டதை பாராட்டி *fssai* வழங்கிய *BHOG* சான்றிதழை **26.01.2020** அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களிடம் வழங்கினார்.



இந்து சமய அறநிலையத்துறை சார்பாக, சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் புதிய திருமண மண்டபத்தில் 13.01.2020 அன்று நடைபெற்ற மாநில அளவிலான பாவை விழா போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களை பெற்ற 36 மாணவ, மாணவிகளுக்கு ரூ.2.10 லட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் வழங்கினார்.



மதுரை, அருள்மிகு மாரியம்மன் தெப்பக்குளம் 40 ஆண்டுகளுக்கு பிறகு கடல்போல் காட்சியளிக்கும் எழில்மிகு தோற்றம்.



108 திவ்ய தேசங்களில் முதல் திவ்ய தேசமான ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற வைகுண்ட ஏகாதசி சொர்க்க வாசல் திறப்பின்போது அருள்மிகு அரங்கநாதர் அருள்பாலிக்கும் காட்சி.



108 திவ்ய தேசங்களில் மூன்றாவது திவ்ய தேசமான கும்பகோணம் அருள்மிகு சாரங்கபாணி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற மாசிமகம் தெப்ப உற்சவம்.



பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தைப்பூசத்தை முன்னிட்டு நடைபெற்ற திருத்தேரோட்டம்.



பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தைப்பூசத்தை முன்னிட்டு பக்தர்கள் காவடி எடுத்து வரும் காட்சி.




ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் நாள்முழுவதும் அன்னதானம் நடைபெறும் அரங்கத்தின் அழகிய தோற்றம்.



சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் அன்னதான திட்டத்தில் உணவு உண்ணும் பக்தர்கள்.

**05.02.2020** அன்று நடைபெற்ற தஞ்சாவூர் பெரிய கோயில் திருகுடமுழுக்கு விழாவில் கலந்துக் கொண்ட திரளான பக்தர்கள்.




PROPOSED LONGITUDINAL SECTIONAL VEIW (EAST TO WEST) OF VEERA VASANDARAYAR MANDAPAM (ALONG CENTER OF MANDAPAM)
LONGITUDINAL SECTIONAL VEIW (EAST TO WEST) OF VEERA VASANDARAYAR MANDAPAM (SOUTH SIDE VIEW)